Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 14 திங்கட்கிழமை (26-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:153

# சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க கருணா விவகாரமும் முட்டுக்கட்டை!

## அவரை ஒளித்து வைத்திருக்கும் அரசுடன் பேசுவதா எனத் தயங்குகின்றனர் புலிகள்

கொழும்பு,ஏப்ரல்26

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகள் ஆரம்பமாவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் விடயங்களில் கருணா விவகாரம் முக்கியமானது எனத் தெரியவருகின்றது.**

**விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணாவை இலங்கை அரசு தஞ்சம் கொடுத்து வைத்துள்ளது என்றும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக அவரைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டு வருகின்றது என்றும் புலிகள் கருதுகின்றனர். இத்தகைய அரசுடன் பேச்சு நடத்துவதா என்ற விசனம் புலிகளின் தலைமையிடம் பலமாக நிலவுவதை உணரமுடிகிறது.**

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி கிழக்கிலங்கையை வட்டுத் தப்பியோடிய கருணாவும் அவரது நெருக்கிய சகாக்களும் இலங்கை அரசுப் படைகளிடம் தஞ்சமடைந்திருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

ஆனால், இதை இலங்கை அரசுத் தரப்பு அடியோடு மறுத்துள்ளது.

எனினும், கருணாவோடு கொழும்புக்குத் தப்பியோடிப் பின்னர், மீண்டும் கிழக்கிலங்கைக்குத் திரும்பி வந்து புலிகளுடன் இணைந்துள்ள கருணாவின் முன்னாள் சகாக்கள் சிலர் நேரடியாகத் தெரிவித்துள்ள தகவல்களும் -

விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினருக்குக் கிடைத்துவரும் புலனாய்வுத் தகவல்களும் -

கருணா, இலங்கை அரசுப் படைகளின் பாதுகாப்பில் தெற்கில் ஓரிடத்தில் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகின்றன என புலிகளின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன

(14ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி அமைச்சர் நேற்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.26

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்களின் அமைச்சர் ஜானகபண்டார தென்னக்கோன் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.

நயினாதீவு நாகவிகாரைக்கு சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்ட அமைச்சர், யாழ். பொது நூலகத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவின் ஆள்கள் இருவர் தஞ்சைப் பகுதியில் கைது?

கருணாவின் ஆள்கள் எனக் கருதப்படும் இருவர் தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என்று தமிழகத்திலிருந்து வெளியாகும் 'நக்கீரன்' சஞ்சிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தஞ்சை மாவட்ட எல்லையோரப் பகுதியில் ஒரத்தநாடு அருகே உள்ள ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணையில் வேலை பார்க்கும் மணிமாறன் என்பவர் கடந்த வெள்ளி இரவு வழக்கம்போல் வேலை முடிந்து தனது சொந்தக் கிராமமான சாமிப்பட்டிக்குப் போய்க்கொண்டிருந்தார். வழியில், 'யூக்லிபடஸ்' காடு. திடீரென அவரை இரண்டுபேர் வழி மறிக்க மிரண்டு போனார் மணிமாறன்.

விடுதலைப் புலிகளின் உடையில் இருந்த இருவரும் "4 நாள்களுக்குத் தேவையான சாப்பாட்டை எங்களுக்குத் தயார் செய்து கொடு" என மிரட்ட மணிமாறன் மறுத்துள்ளார்.

சட்டெனக் கைத்துப்பாக்கிகளை எடுத்த இருவரும் துப்பாக்கி முனையில் மணிமாறனை மிரட்டினர். பயந்துபோன அவர் சாப்பாடு தயார் செய்து தருவதாகச் சொல்லிவிட்டு கிராமத்துக்குச் சென்று மக்களைத் திரட்டிக்கொண்டு மீண்டும் காட்டுக்கு வந்தார். மக்களைப் பார்த்ததும் அந்த இருவரும் காட்டுக்குள் ஒளிந்துவிட்டனர்.

கால்நடைப் பண்ணை உதவி இயக்குநர் பெரியசாமியிடம் இந்தத் தகவலை மணிமாறன் சொல்ல அவர் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்தார். இரவோடு இரவாக காட்டைத் துளாவிய பொலீஸ்படை, இரண்டு பேரையும் வளைத்துப்பிடித்தது. தற்போது 'க்யூ' பிரிவுக் காவலில் இருக்கும் அவ்விருவர் பற்றியும் பொலீஸார் மூச்சு விட மறுக்கின்றனர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தஞ்சை, திருச்சி பிரசார நேரத்தில் இந்தச்சம்பவம் நடந்ததால், விஷ

(14ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான இணக்கப்பாடு இன்றேல் இலங்கை சர்வதேச உதவிகளை இழக்கும் நிலை வரும்

## அகதிகளுக்கான ஐ.நா. தூதரக தலைமையக அதிகாரி அபாய அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

இலங்கையில் விரைவில் நிரந்தரமான சமாதான உடன்பாடு ஏற்பட வேண்டும். இல்லையேல் சர்வதேச உதவிகள் கிடைக்கும் வாய்ப்பு அற்றுப் போகும் அபாயமான நிலை ஏற்பட்டுள்ளது.

- இப்படி எச்சரித்திருக்கிறார் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஜெனீவா தலைமையக கண்காணிப்பாளர் நாயகம் டெனிஸ் மைக்னமாறா.

யாழ்ப்பாணத்துக்கு கடந்த வெள்ளியன்று வந்த அவர், உதயனுக்கு அளித்த ஒரு செவ்வியில் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச மட்டத்தில் 30 நாடுகளின் இனப்பூசல் தொடர்பாக மோதல்கள் இடம்பெற்றுவருகின்றன. அந்த நாடுகளில் பலவற்றில் சிக்கல்கள் தீர்ந்துள்ளன.

சர்வதேச சமூகம் இந்த நாடுகளுக்கு எல்லாம் உதவவேண்டிய நிலையில் உள்ளது.

இலங்கையில் இனமோதல்களுக்குத் தீர்வு காணப்படும் சூழல் ஏற்பட்டதையடுத்து. சர்வதேச சமூகம் டோக்கியோவில் கூடி இலங்கைக்குப் பெரும் நிதி ஒதுக்கீட்டை வழங்க முன்வந்தது. ஆனால் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட சீரற்ற நிலைமை காரணமாக அந்த நிதி இன்னமும் இங்கு வந்துசேரவில்லை.

இங்கு உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்பட்டு அரசியல் உடன்பாடு காணப்பட்டால், சர்வதேச சமூகத்தின் உதவிகள் கிடைக்கும். அரசியல் உடன்பாடு எட்டப்படாவிட்டால் உதவிகள் கிடைக்கும் வாய்ப்பு அற்றுப்போகும் அபாய நிலை உள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி செயலாளர் நாயகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க இங்கு வந்துள்ளோம். இங்கு வந்தபின் ஜனாதிபதியைக் கடந்த திங்கட்கிழமை சந்தித்தோம்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் தமிழ், முஸ்லிம் கட்சிகளை ஓரணியாக்குவதற்கு கூட்டமைப்பு முயற்சி!

கொழும்பு,ஏப்.26

தமிழ் - முஸ்லிம் - மலையகக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்து ஓரணியாக நாடாளுமன்றத்தில் செயற்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கடந்த வெள்ளியன்று கொழும்பில் கூடி இது தொடர்பான முடிவை எடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற நூலகத்தில் கூடிய கூட்டமைப்பு எம்.பிக்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா. எம்.கே. சிவாஜிலிங்கம், ஜி.ஜி.கஜேந்திரகுமார். சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இது தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.

இது தொடர்பாக அடுத்தவாரங்களில் இ.தொ.கா., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்களுடன் தமிழ்க் கூட்டமைப்பு பேச்சுக்களை நடத்தவிருக்கின்றது.

தமிழ் - முஸ்லிம் - மலையக மக்கள் தொடர்பான பொது விடயங்களில் ஒன்றுபட்டும், ஒவ்வொரு கட்சிகளின் தனித்துவமான விடயங்களில் பரஸ்பரமாகவும் செயற்படும் வாய்ப்பு குறித்தும் இந்தப் பேச்சுக்களில் ஆராயப்படவுள்ளது.

தமிழ் - முஸ்லிம் - மலையகக் கட்சிகள் ஒன்றிணைந்து ஓரணியாக நாடாளுமன்றத்தில் செயற்பட்டு சிறுபான்மையினரின் பலத்தைக் காட்டவேண்டும். (14ஆம் பக்கம் பார்க்க)

## மகாவலி அமைச்சுக்கு இழுபறி ஏன்? திடுக்கிடும் தகவல்கள் அம்பலம்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி.) இடையில் இழுபறியை ஏற்படுத்திய விவகாரங்களில் முக்கியமானதொன்று மகாவலி அபிவிருத்தி அமைச்சுப் பற்றிய சர்ச்சையாகும்.

ஐ.ம.சு. கூட்டமைப்புக்கான உடன்பாடு ஏற்பட்ட சமயம், கூட்டமைப்பின் உத்தேச புதிய அரசில் மகாவலி அபிவிருத்தி அமைச்சைத் தங்களுக்குத் தருவதாக உறுதியளிக்கப்பட்டதாகவும் -

அது இப்போது மறுக்கப்பட்டு - மறக்கப்பட்டு - சு.க.பிரமுகருக்கு வழங்கப்பட்டுவிட்டது எனவும் - தெரிவித்து சீற்றம் கொண்டுள்ளனர் ஜே.வி.பியினர்.

இவ்வளவு தூரம் மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்காக இருதரப்பும் பிய்ச்சல் - பிடுங்கல் படுவது ஏன் என்று விசாரித்த போது திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்து இலங்கையில் அதிகளவு ஆயுதத் தளபாடங்களையும், இராணுவப்பயிற்சி பெற்ற அணிகளையும் கொண்டிருக்கும் அமைச்சு இதுதான் என்ற விவரம் இப்போதுதான் வெளிவந்திருக்கிறது. அதனால்தான் அந்த அமைச்சுக்காக இவ்வளவு போட்டா போட்டி.

மகாவலி அபிவிருத்தி அமைச்சின் கீழ் விக்டோரியா, மாதுறுஓயா, கொத்மலை, ரந்தெனிகல, மொறகஹந்த ஆகிய ஐந்து பாரிய நீர்த்தேக்கங்கள் உள்ளன. (14ஆம் பக்கம் பார்க்க)



# வடமேல் மாகாண சபைத் தேர்தலில் சுதந்திரக் கூட்டமைப்புக்கு பெருவெற்றி!

## மொத்தம் 52 உறுப்பினர்களில் 31 அதற்கு

புத்தளம்,ஏப்.26

நேற்றுமுன்தினம் நடந்த வடமேல் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கணிசமான பெரும்பான்மையுடன் வென்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் 31 உறுப்பினர்களும், ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் 19 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காங்கிரஸின் சார்பில் இரு உறுப்பினர்களும் மாகாண சபைக்குத் தெரிவாகினர்.

குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த மாகாணத்தில் வாக்குகள் தொகுதி வாரியாக எண்ணப்பட்டன.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் தொகுதி தவிர்ந்த ஏனைய தொகுதிகளிலுமாக மொத்தம் 18 தொகுதிகளில் ஐக்கிய மககள் சுதந்திரக் கூட்டமைப்பு வென்றது.

மாகாண சபைக்கான தொகுதி வாரி முடிவுகள் மூன்று வாரங்களுக்கு முன்னர் நடந்த பொதுத் தேர்தல்களின் தொகுதி வாரி முடிவை ஒத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், தான் தக்கவைத்துக் கொண்டுள்ள புத்தளம் தேர்தல் தொகுதியில் இம்முறை சுமார் 10 ஆயிரம் வாக்குகளை ஐ.தே.கட்சி குறைவாகப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு மாவட்டங்களிலும் கடந்த பொதுத் தேர்தலில் சுமார் 11 லட்சத்து 45ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிதனர். ஆனால், மாகாணசபைத் தேர்தலில் ஆக 8லட்சத்து 68 ஆயிரம் பேரே வாக்களித்துள்ளனர். இதன்படி பொதுத் தேர்தலை விட மாகாண சபைத் தேர்தல்களில் சுமார் 2 லட்சத்து 76 பேர் குறைவாக வாக்களித்திருக்கின்றனர்.

ஐ.தே.கட்சிக்கு சுமார் ஒரு லட்சத்து 64 ஆயிரம் பேரும் ஐ.தே. முன்னணிக்கு சுமார் 63 ஆயிரம் பேரும குறைவாக வாக்களித்திருக்கின்றனர்.

இது இத்தேர்தலில் மக்கள் ஆர்வத்துடன் வாக்களிக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. (க)

### மத்திய கல்லூரியின் ஜி.சீ.ஈ. மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ். மத்திய கல்லூரியிலிருந்து எதிர்வரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் வைத்து சம்பிரதாயபூர்வமாக வழங்கப்படவுள்ளன.

இப்பாடசாலையில் கடந்த பல ஆண்டுகளாக இடம்பெற்றுவருவது போன்று இம்முறையும் மதத் தலைவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும அதிபர் முன்னிலையில் ஆசி நிகழ்வு இடம்பெற்று அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

பரீட்சை அனுமதி அட்டையைப் பெறுவதற்காக மாணவர்களை அவர்களது பெற்றோருடன் வருகை தருமாறு கல்லூரி அதிபர் க.இராசதுரை கேட்டுள்ளார். (எ-9)

### சுவரொட்டிகளை ஒட்டியோர் கைது!

பன்னிப்பிட்டிப் பகுதியில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு எதிரான சுவரொட்டிகளை சட்டவிரோதமாக ஒட்டிக் கொண்டிருந்தவர்கள் எனக் கூறப்படும் இரு சந்தேகநபர்களை மஹரகம பொலீஸார் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களிடமிருந்து ஒரு தொகுதி சுவரொட்டிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இருவரையும் நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மஹரகம பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலன் பெரேரா தெரிவித்தார். (க)

### தாய் - சேய் நலன் அதிகாரியாக தெய்வேந்திரன் நியமனம்

யாழ். மாவட்ட தாய் சேய் நலன் அதிகாரியாக டாக்டர் இ.தெய்வேந்திரன் கடந்த 15ஆம் திகதிமுதல் மாகாண சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளராகப் பணியாற்றிய டாக்டர் தா. சிவபாதம் இருமாத விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ளதால் டாக்டர் தெய்வேந்திரன் அந்தப் பதவியை பதில் கடமையாற்றுகிறார் எனக் கூறப்பட்டது. (எ-3-51)

### கிளிநொச்சியில் பெண்களுக்கு பயிற்சிநெறிகள்

கிளிநொச்சி,ஏப்.26

கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிலையம் புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பித்துள்ளது.

தையல், கணனி, தட்டச்சு, சுருக்கெழுத்து, தட்டச்சுத் திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆங்கில வகுப்புக்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

தையல் வகுப்புக்களில் 35 பெண்களும் கணனி, தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய வகுப்புக்களில் 65பெண்களும் பயிற்சி பெற்று வருகின்றனர். இப்பயிற்சி நெறிகள் ஆறு மாதங்கள் நடைபெறவுள்ளன. (ஐ-12)

### பன்னவேலைப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபை 10 இடங்களில் பன்னவேலைப் பயிற்சி நெறியினை நடத்தி வருகிறது.

பருத்தித்துறை, கரவெட்டி, கொடிகாமம், சாவகச்சேரி, ஆனைக்கோட்டை, கைதடி, பருத்தித்துறை கிழக்கு, மண்டைதீவு, யாழ். நகரம், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் இப்பன்னவேலைப் பயிற்சிகள் இடம்பெற்றுவருகின்றன.

இதேவேளை - பன்னவேலைப் பயிற்சி நெறி காரைநகர் தோப்புக்காடு கிராமத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஐ-12-ரி)

## சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலீஸார் பொதுமக்களுக்கு வேண்டுகோள்!

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்நகரின் மத்தியில் உள்ள வின்ஸர் தியேட்டருக்கு பின்புறமாக வுள்ள பாழடைந்த கிணற்றில் இருநது பத்து நாள்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட சடலத்தை அடையாளம் காண்பதற்கு உதவுமாறு பொதுமக்களை பொலீஸார் கேட்டுள்ளனர்.



கடந்த 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ்நகரின் மத்தியிலுள்ள வின்ஸர் தியேட்டருக்கு பின்புறமாகவுள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து இரு ஆண்களுடைய சடலங்கள் யாழ்.பொலீஸாரால் மீட்கப்பட்டன. அன்றைய தினமே அச்சடலங்கள் அடையாளம் காண்பதற்காக யாழ்.ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தன.

சடலத்தில் ஒன்று அன்றைய தினமே அடையாளம் காணப்பட்டுவிட்டது. மற்றைய சடலம் கடந்த பத்து நாள்களுக்கு மேலாகியும் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் காணப்படாத சடலத்தையே மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள்.

படத்தில் காணப்படுபவர் சுமார் ஐந்து அடி மூன்று அங்குல உயரமுடையவர். அவரது தலை மயிரில் ஒரு பகுதி கறுப்பாகவும் மறுபகுதி வெள்ளையாகவும் உள்ளது. இவர் 45 முதல் 55 வயது வரையானவராக இருக்கலாம் என்று பொலீஸார் மதிப்பிடுகின்றனர்.

நல்நிற முழுக்கை சேர்ட்டும் சாரமும் அணிந்திருக்கிறார். சடலத்தில் வெளிக்காயங்கள் எதுவும் காணப்படவில்லை எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலீஸின் குற்றத்தடுப்புப் பிரிவுடன் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்குமாறு பொலீஸாரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

டயலொக் ரகக் கைத் தொலைபேசி - 112 என்ற இலக்கத்துடனோ, 0777-917721 என்ற இலக்கத்துடனோ, (021) - 222-2222 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

தகவல் தெரிவிப்பவர்கள் தங்கள் பெயர் விவரத்தைக் கூறவேண்டியதில்லை என்றும் -

விரும்பினால் யாழ்.பொலீஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு கடித மூலமும் அறிவிக்கலாம் என்றும் -

அவ்வேளையிலும் தகவல் தெரிவிப்பவர் தமது பெயரை வெளியிட வேண்டிய தேவை இல்லை என்றும்-

மேலே உள்ள படத்தில் காணப்படுபவருக்குத் தெரிந்த அல்லது அறிமுகமானவர்கள் பற்றிய தகவலையேனும் தமக்கு அறியத் தந்தால் உதவியாக இருக்கும் - என்று யாழ்.பொலீஸ் குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் விக்ரமரத்ன பண்டா உதயனுக்குக் கூறினார். (அ-7)

# தேர்தல் குற்றங்கள் 58 பேர் கைது!

கொழும்பு,ஏப்.26

வடமேல் மாகாணத் தேர்தலின் போது தேர்தல் சட்டவிதிகளை மீறியவர்கள் எனக் கருதப்படும் 58 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருநாகல், குளியாப்பிட்டிய, நிக்கவரெட்டிய, புத்தளம் போன்ற பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் இன்று காலை நீதிமன்றில் ஆஜர்செய்யப்படுவர் என வடமேல் மாகாண பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

வடமேல் மாகாணத்தில் கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் ஒப்பிடும்போது, இந்தத் தேர்தலின் போது மிகவும் குறைந்தளவு வன்முறைகளே இடம்பெற்றுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (க)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு 15 விரிவுரையாளர்கள், 20 ஊழியர்கள்

## நியமனம் செய்ய அனுமதி கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ். பல்கலைக்கழகத்துக்கு கல்விசார்ந்த 15 விரிவுரையாளர்களையும், கல்வி சாராத 20 ஊழியர்களையும் மேலதிகமாக நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்காக கடந்த செவ்வாயன்று திறைசேரி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சகல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களும் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் திறைசேரிச் செயலாளர் டாக்டர் ஜயசுந்தர, உயர் கலவி அமைச்சுச் செயலர் தாரா டிமெல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பல்கலைக்கழகங்களுக்கான நிதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு திறைசேரியிடம் இருந்து பெற்று பல்கலைக்கழகங்களுக்கு வழங்கி வருவது வழக்கம். இந்த நடைமுறை மாற்றப்பட்டு நேரடியாக திறைசேரியில் இருந்து நிதியைப் பெறும் நடைமுறை கடந்த இரண்டு வருடகாலமாக அமுலில் உள்ளது. இந்த நடைமுறை மாற்றப்பட்டு மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக நிதியைப் பெறும் முறைமை உருவாக்கப்பட வேண்டும் என்று துணைவேந்தர்கள் கோரினர்.

இந்த விடயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் கொள்கை அளவில் ஏற்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் நடைமுறைச் செலவீனங்களுக்கு மேலதிகமாக 3 கோடியே 69 லட்சம் ரூபாவும் -

கல்விசார் கற்றல் உபகரணங்களைக் கொள்வனவுசெய்வதற்கென 2 கோடியே 50 லட்சம் ரூபாவும் வழங்கவேண்டும் என்று இந்தக் கூட்டதில் கலந்துகொண்ட துணைவேர்தர் மோகனதாஸ் கோரிக்கை விடுத்தார்

இதற்கிடையில் -

கொழும்பில் இன்று ஜனாதிபதிக்கும, துணைவேந்தர்களுக்கும் இடையில் இடம்பெறும் சந்திப்பில் இந்தக் கோரிக்கையை தான் முன்வைக்க விருப்பதாக துணைவேந்தர் மோகனதாஸ் உதயனுக்குத் தெரிவித்தார். (எ-3)

### யாழ். கணனி நிலையம் அருகில்

# குண்டுவெடித்த சம்பவம் குறித்து சந்தேகத்தில் ஒருவர் கைது!

யாழ். சிவன் பண்ணை வீதியில் உள்ள கணனி நிலையம் ஒன்றின் அருகே நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் குண்டு ஒன்று வெடித்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவன் யாழ். பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கணனி நிலையத்தின் வெளிப்புறச் சுவர் பகுதியில் குண்டு ஒன்று வெடித்ததாகவும் -

அதன் சிதறல்கள் கணனி நிலையத்துக்குள் வீழ்ந்ததாலும் குண்டு அதிர்ச்சியாலும் இரு கணனிகள் சேதமடைந்தன என்றும் - கூறப்பட்டது.

இக்கணனி நிலையத்தை நடத்தி வந்த ஆசிரியர் கொழும்பு சென்றுள்ளதால், மூன்று ஆசிரியர்கள் நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்துள்ளனர்.

சம்பவதினம் வழமைபோல வகுப்புகள் முடிதது அவர்கள் வெளியேறிய பின்பே இக்குண்டு வெடித்துள்ளதாக பொலீஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்திய பொலீஸார் கணனி நிலையத்துக்கு அருகில் வசிக்கும் சத்தியமூர்த்தி முகுந்தன் (வயது 17) என்பவரைக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (எ-3-6-7)

### விபத்தில் குடும்பப் பெண் உயிரிழப்பு:

# மோட்டார் சைக்கிளை ஓட்டிய இளைஞனுக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்,ஏப்.26

சுண்டுக்குளியில் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை அலுவலகம் முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவம் தொடர்பாக மோட்டார் சைக்கிள் ஓட்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளின் பின்பக்கத்தில் அமர்ந்துவந்த குடும்பப் பெண் ஒருவர் வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பாகவே பிரஸ்தாப மோட்டார் சைக்கிள் ஓட்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி உடையார்கட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிருபாமூர்த்தி (வயது-38), அவரது மகனான தசியந்தன் (வயது-12) ஆகியோர் விசர்நாயத் தடுப்பூசி ஏற்றுவதற்காக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கடந்த வியாழக்கிழமை சென்றனர். வழியில் விபத்துக்குள்ளான இருவரும் காயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

அவர்களைப் பார்ப்பதற்காக கிருபாமூர்த்தியின் மனைவியான நாகநந்தினி (வயது-39) என்பவர் தனது உறவினரான இளைஞர் ஒருவருடன் யாழ்ப்பாணம் நோக்கி கடந்த வெள்ளிக்கிழமை மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்.

முற்பகல் 11 மணியளவில் சுண்டுக்குளி பகுதியில் வந்துகொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளுக்கு முன்பாகச் சென்ற உழவு இயந்திரம் ஒன்று மற்றொரு வாகனத்திற்கு இடம் கொடுப்பதற்காக வேகம் தணித்த போது பின்னால் அதிவேகமாக வந்து கொண்டிருந்த தனது மோட்டார் சைக்கிளை அந்த இளைஞர் திடீரென நிறுத்த முனைந்தார் என்றும் - அப்போது பின்னால் இருந்த குடும்பப் பெண் கீழே வீழ்ந்து தலையில் படுகாயம் அடைந்தார் என்றும் கூறப்படுகிறது.

மயங்கிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அந்தப் பெண் பின்னர் அங்கு மரணமானார்.

இந்த மரணம் தொடர்பாக யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா மரண விசாரணை நடத்தினார்.

மரண விசாரணையின் பின் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற இளைஞனான சிவராசா யோகேஸ்வரன் (வயது-24) என்பவரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3-6)



சைப்பிரஸில் வாக்களிப்பின்போது...

# இணைப்பை நிராகரித்தனர் கிரேக்க சைப்பிரஸ் பகுதி மக்கள்

## வரலாற்றுச் சந்தர்ப்பம் ஒன்று நழுவியது என்கிறார் அனான்

பிரிந்து கிடக்கும் இரு சைப்பிரஸ்களையும் மீண்டும் ஒன்றிணைக்கும் வரலாற்றுச் சந்தர்ப்பம் ஒன்று கை நழுவிச் சென்றுள்ளது. கிரேக்கப் பகுதி சைப்பிரஸ் மக்கள் மீள் இணைப்புக்கு எதிராக வாக்களித்ததன் மூலம் சைப்பிரஸை இணைக்கும் ஐ.நாவின் திட்டம் பிசுபிசுத்துப்போனது.

சைப்பிரஸ் பிரச்சினைகளைத் தீர்த்து இரு பகுதிகளையும் மீளிணைக்கும் இணையற்ற ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பம் கைநழுவிப் போய்விட்டது என்றார் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான்.

அனானின் இணைப்புத் திட்டத்தை கிரேக்க சைப்பிரஸ் மக்கள் அடியோடு மறுத்துவிட்டார்கள் துருக்கி சைப்பிரஸ் மக்கள் இதற்கு எதிர்மாறான கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். அவர்களில் 65 வீதமானவர்கள் இணைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

87 வீதமானவர்கள் அங்கு வாக்களித்துள்ளனர். அவர்களில் 35.1 வீதமானவர்கள் இணைப்பை நிராகரித்தனர். கிரேக்க சைப்பிரஸில் வாக்களித்த 88 சதவீதம் பேரில் 75.8 சதவீதமானோர் இணைப்பை நிராகரித்தனர். 24.2 சதவீதமானோர் மட்டும் இணைப்புக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

பிரிந்து கிடக்கும் இரு சைப்பிரஸ்களையும் மீள இணைப்பது தொடர்பான இந்தக் கருத்து வாக்கெடுப்பு கடந்த சனியன்று நடைபெற்றது.

கிரேக்க சைப்பிரஸ் மக்களின் முடிவு ஏமாற்றம் தருவதாக உள்ளது என்று அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது. இரு சைப்பிரஸ்களும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆதரவாக வாக்களிக்கும் என்றும் இணைந்து சர்வதேச சமூகத்துக்குள் உள்வாங்கப்படும் என்றும் தாம் எதிர்பார்த்ததாக அமெரிக்கா அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

கிரேக்க சைப்பிரஸ் மக்களின் தீர்மானம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தனது விசனத்தைத் தெரிவித்துள்ளது. இந்த முடிவு மூலம் ஐரோப்பிய ஒன்றியச்சட்டங்களையும் நலன்களையும் அவர்கள் மட்டுமே அனுபவிக்கப் போகிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இணைப்புக்கு எதிராக கிரேக்க சைப்பிரஸ் மக்கள் வாக்களித்துள்ளதால் அந்தப் பகுதி மட்டுமே மே முதலாம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்துகொள்ளும்.

"நீண்ட காலமாகத் தொடர்ந்துவரும சைப்பிரஸ் பிரச்சினைகளுக்கு இணைப்பு ஒரு தீர்வாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அந்தச் சந்தர்ப்பம் தவறிவிட்டது" என்று ஐரோப்பிய ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கிரேக்க சைப்பிரஸ் ஐ.நா. திட்டத்தை நிராகரிக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், இவ்வளவு பெரும் எண்ணிக்கையான மக்கள் நிராகரிப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளமை எதிர்பார்க்கப்படாத ஒன்று என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

1974இல் துருக்கிய படையெடுப்பையடுத்து சைப்பிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது. ஒரு பகுதி கிரேக்க ஆளுகையின் கீழும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி துருக்கிய ஆளுகையின் கீழும் இருந்துவந்துள்ளன. இந்த இரு பகுதிகளையும் இணைத்து சைப்ரஸை மீண்டும் ஒரே நாடாக்கிக் கொள்வதில் உலக நாடுகள் ஆர்வமாக உள்ளன. சர்வதேச சமூகத்தின் தொடர் அழுத்தங்கள் காரணமாக இணைப்புக்கு கிரேக்க சைப்பிரஸ் இணங்கும் என்றும அப்படியில்லாமல் எதிர்ப்புத் தெரிவித்தால் அது சிறியளவிலானதாக இருக்கும் என்றும் சர்வதேச சமூகம் எதிர்பார்த்தது.

அவ்வாறு எதிர்ப்பு சிறியளவிலானதாக இருந்தால் அது குறித்து மேலதிக விளக்கங்களை வழங்கி சில மாதங்களிலேயே மீண்டும் ஒரு கருத்து வாக்கெடுப்பை நடத்தி இரு சைப்பிரஸ்களையும் இணைத்துவிடலாம் என்பதே சர்வதேச சமூகத்தின் எண்ணமாக இருந்தது.

ஆனால், இவ்வளவு பெரும் எண்ணிக்கையான கிரேக்க சைப்பிரஸ் மக்கள் இணைப்பை எதிர்த்திருப்பது சர்வதேச சமூகத்துக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிரேக்க சைப்பிரஸ் பிரதமர் டாஸோ பாப்படோ பௌஸ் சைப்பிரஸ் இணைப்புத் திட்டத்தை நிராகரிக்கும்படி தனது மக்களைக் கேட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

# ஷெரோனின் மிரட்டலை நிராகரித்தார் அரபாத்

## மலைகளை அகற்ற முடியாது எனச் சூளுரை

ஜெருசலேம்,ஏப்.26

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் புதிதாக விடுத்த அச்சுறுத்தலை நிராகரித்தார் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்.

மேற்குக்கரையின் ரமழாவில் உள்ள தனது தலைமை அலுவலகத்திற்கு வெளியே ஆதரவாளர்கள் மத்தியில் பேசும்போது, இஸ்ரேலினால் தன்னை ஒருபோதும் அங்கிருந்து நீக்கமுடியாது என்றார்.

ஷெரோனின் மிரட்டலுக்குப் பயந்து மலைகள் நகரப்போவதில்லை என்றும் அவர் கூறினார். அரபாத்தைக் கொன்றால் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் அப்படியே முடிந்துவிடும் என்று பலஸ்தீனப் பிரதமர் அஹமட் குரே தெரிவித்துள்ளார்.

முன்னதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன், தான் மூன்று வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு வழங்கிய "அரபாத்திற்கு உடல் ரீதியான தீங்கு

உலக அரங்கில்

வராது" என்ற உறுதிமொழியைப் பின்பற்றப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார். கடந்த வெள்ளியன்று ஷெரோன் இந்தப் புதிய மிரட்டலை விடுத்திருந்தார். ஹமாஸ் இயக்கத் தலைவர்கள் இஸ்ரேலினால் கொல்லப்பட்டதன் பின்னணியில் அவரது இந்த மிரட்டல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஷெரோனின் இந்த மிரட்டல் குறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல், அரபாத்தின் உயிருக்கு தீங்கு விளைவிப்பதை புஷ் உறுதியாக எதிர்க்கிறார் என்று தெரிவித்தார்.



"ஷெரோன் தனக்கு வாக்களித்ததற்கு மாறாக அத்தகைய ஒரு காரியத்தைச் செய்யமாட்டார் என்று அதிபர் புஷ் உறுதியாக நம்புகின்றார்- என்றார் பவல்.

இந்த விடயம் குறித்துப் பேசுவதற்காக ஷெரோனின் பிரதம தள அதிகாரியை (படைகளின் ) புஷ்ஷின் தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிஸா ரைஸ் நியூயோர்க்குக்கு அழைத்துள்ளார்.

அரபாத் பலஸ்தீன ஆயுததாரிகளுக்கு ஆதரவளிப்பதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டுகின்றது. ஆனால் அரபாத்தின் அலுவலகம் முன்பாக கூடியிருந்த நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் அரபாத்துக்காகத் தமது இரத்தத்தையும் உயிர்களையும் இழக்கத் தயாராக இருப்பதாகச் சபதமிட்டனர்.

"நாங்கள் எல்லோரும் தியாகிகளாவதற்காகக் காத்துக்கொண்டிருக்கின்றோம்"- என்று அவர்கள் முன் சூளுரைத்தார் அரபாத்.

"நான் ஷெரோனுக்கும் அவரது கோஷ்டியினருக்கும் சொல்லிக்கொள்கின்றேன், மலையையும் வீசும் காற்றையும் உங்களால் நகர்த்தவே முடியாது"- என்றும் அரபாத் அங்கு கூறினார்.

இதேவேளை, தொடரும் வன்முறைகளின் ஒரு பகுதியாக சனிக்கிழமையன்று இஸ்ரேலியப்படையினர் மூன்று பலஸ்தீனியர்களை சுட்டுக்கொன்றனர். அவர்கள் தற்கொலைத் தாக்குதலுக்குத் தயாரானதால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று இஸ்ரேல் இராணுவம் வழமை போன்று கொலைகளுக்கு சால்ஜாப்புத் தெரிவித்துள்ளது. அவர்களுடன் இருந்த மற்றொருவர் இராணுவத்தினரை நோக்கிச்சுட முயன்ற சமயம் கைதுசெய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்கள் தியாகிகள் படையணியைச் சேர்ந்தவர்கள். இது அரபாத்தின் பாட்டா அமைப்புடன் சேர்ந்து இயங்கிவருகிறது. (க)

# பிரிட்டிஷ் ஆராய்ச்சி மையத்தில் மர்மத் தூள் பொட்டலம்

தெற்கு இங்கிலாந்து நகரில் ஆராய்ச்சி மையம் ஒன்றில் சந்தேகத்திற்கு இடமான வகையில் ஒரு பொட்டலத்தில் இருந்த வெள்ளைநிறத் தூள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த மையத்தின் ஊழியர்களுக்கு அந்தத் தூளினால் பாதிப்பு ஏற்படாமல் அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதுதவிர ஆராய்ச்சி மையத்தின் அருகிலுள்ள மற்றொரு நிறுவனத்தின் 60 ஊழியர்களுக்கும் இதே போன்ற சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றது.

கென்ட் நகரில் தூள் பொட்டலம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டவுடன் பொலீஸாரும் தீயணைப்புத் துறையினரும் சம்பவ இடத்திற்கு உடனடியாக வரவழைக்கப்பட்டனர்.

தீவிரவாதிகள் அந்திரெக்ஸ் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் நிலவுவதால் இந்த வெள்ளைநிறத் தூள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (க)

# கடந்த ஒருசில நாள்களில் மட்டும் ஈராக்கில் 47 பேர் உயிரிழந்தனர்!

## அவர்களில் 8 பேர் அமெரிக்கப் படையினர்

பக்தாத்.ஏப்.26

ஈராக்கின் மசகு எண்ணெய் ஏற்றுமதி நிலையம் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் இரு அமெரிக்கக் கடற்படைச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். மேலும் நால்வர் காயமடைந்தனர். இத்துடன் கடந்த சில நாள்களில் மட்டும் ஈராக்கில் நடந்த வன்செயல்களில் 47 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 8 பேர் அமெரிக்கப படையினர்.

வடக்கே சுனி முஸ்லிம்கள் வாழும் பகுதிகளிலும் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலும் பக்தாத்திலும், அதனருகில் உள்ள சடர் நகரிலும் வன்முறைகள் இடம் பெற்றுள்ளன.

வடக்குக் குடாப் பகுதியில் உள்ள எண்ணெய் ஏற்றுமதி நிலையத்தின் மீது கடல் மார்க்கமாக மூன்று தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில் 2 அமெரிக்கப்படையினர் உயிரிழந்தனர். மேலும நால்வர் காயமடைந்தனர். கரையிலிருந்து சில நூறு மீற்றர் தூரத்தில் கடலில் அமைந்துள்ளது இந்த மசகு எண்ணெய் ஏற்றுமதி நிலையம். ஈராககில் உற்பத்தி செய்யப்படும் எண்ணெய் இங்கிருந்து கப்பல்களுக்கு மாற்றப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றது

வெடிமருந்து நிரப்பப்பட்ட சிறிய படகுகளில் வந்த தற்கொலையாளிகள் நிலையத்தை மோதித் தகர்க்க முயன்றுள்ளனர். ஆனால், நிலையத்துக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. எனினும் அங்கு பணிகள் அனைத்தும் காலவரையறையின்றி நிறுத்தப்பட்டுள்ளன. மூன்று படகுகளில் இரண்டு, நிலையத்தை மிக நெருங்கி வெடித்துள்ளன. ஒன்று மசகு எண்ணெய் விநியோக மையப்பகுதிக்கு அருகிலும் மற்றொன்று மசகு எண்ணெய் தாங்கிக்கு அருகிலும் வெடித்தன. எனினும், மசகு எண்ணெய்யை கப்பலுக்கு நிரப்பும் விநியோக வழிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

ஈராக்கின் தெற்குப் பகுதியான பஸ்ராவில் அண்மையில் 74 பேர் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த தற்கொலைத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஈராக்கியர்கள் மூவரைப் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். அவர்கள பயணம் செய்த வாகனம் வெடிபொருள்களுடன் கைப்பற்றப்பட்டுள்ளது.

பக்தாத்துக்கு வடக்கே உள்ள தாஜி என்ற இடத்தில் இடம்பெற்ற ரொக்கெட் தாக்குதலில் அமெரிக்கப் படையினர் நால்வர் உயிரிழந்தனர்; 7 பேர் காயமடைந்தனர். அவர்களில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அமெரிக்கப்படையினரின் தளம் ஒன்றே ரொக்கட் தாக்குதலுக்கு இலக்கானது.

தெற்கு நகரான குச்சில் அமெரிக்க வாகனத் தொடரணி மீது நடத்தப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 519 பேர் சதாமின் வீழ்ச்சிக்குப் பின்னர் பலியாகினர்.

இஷ்கான்டாறியா என்ற இடத்தில வீதியோரம் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கி பயணிகள் பஸ் ஒன்று சின்னாபின்னமாகியது இதில் 11பேர் உயிரிழந்தனர். அதே அளவானோர் காயமடைந்தனர். பக்தாத்துக்கு தெற்கே 50 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது இந்நகரம்.

திக்ரித் நகரில் உள்ள அமெரிக்க இராணுவ தளமருகே இடம்பெற்ற கார் குண்டுவெடிப்பில் ஈராக்கிய பொலஸார் நால்வர் கொல்லப்பட்டனர்.

ஷியா பிரிவினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகரில் இடம்பெற்ற நான்கு வெவ்வேறு தாக்குதல்களில் 14 பேர் உயிரிழந்தனர்; 36 பேர் காயம்டைந்தனர். ஷியா கிளர்ச்சிக் குழுவினர் ஆன்மீகத் தலைவரான மொக்டடாசடரின் ஆதரவாளர்களே இப் பகுதியில் அதிகம் உள்ளனர்.

'கூட்டுப் படையினர் பயன்படுத்தி வந்த பழைய சிகரட் உற்பத்திசாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலிலேயே இவர்கள் உயிரிழந்தனர்' என்று கூறப்பட்டது.

கர்பலாவில் தாக்குதல் நடத்த முயன்ற ஐந்து கிளர்ச்சியாளர்கள் பொலீஸாரால் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறினர்.

மற்றைய வன்முறைகள் சுனி முஸ்லிம்களின் கோட்டையான பலூஜாவில இடம்பெற்றன. கடந்த மூன்று வாரங்களாக இந்நகரம் அமெரிக்கப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள வீடு ஒன்றை ஷெல் தாக்கிச் சேதப்படுத்தியதில் இரண்டு வயது குழந்தை ஒன்று உடல் சிதறிப பலியானது.

இந்த நகரிலுள்ள ஆயுத தாரிகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இணக்க ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. எனினும் அதனை மீறி வருகின்றனர் என்று இருதரப்பும் மாறி மாறி குற்றம் சாட்டி வருகின்றது. (க)

# 122 ஆண்டுகளுக்குப் பிறகு வான வீதியில் ஓர் அதிசயம்

122 ஆண்டுகளுக்குப் பிறகு வான வெளியில் நடைபெறும் அதிசய நிகழ்ச்சியை எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி காணலாம்.

சூரியக் குடும்பத்தில் உள்ள பூமி உட்பட அனைத்துக் கிரகங்களும் சூரியனை மையமாக வைத்துச் சுற்றி வருகின்றன. அவ்வாறு சுற்றிவரும்போது சில சமயங்களில் பூமிக்கும் சூரியனுக்கும் குறுக்கே சில கிரகங்கள் பயணஞ்செய்வது உண்டு.

சுக்கிரன் எனப்படும் வெள்ளி இதேபோல் சூரியனைச் சுற்றி வரும்போது பல ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமிக்கும் சூரியனுக்கும் இடையே செல்வது உண்டு . இது அரிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

எதிர்வரும் 8ஆம் திகதி சுக்கிரன் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே செல்லும். தொலைநோக்கிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு முதல் முறையாக 1631ஆம் ஆண்டு இந்தக் காட்சியை மக்கள் கண்டனர். அதன் பிறகு 1639, 1761, 1769, 1874, 1882 ஆகிய ஆண்டுகளில் வெள்ளிக்கிரகம் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சென்றதைக் காணமுடிந்தது.

அப்போது சூரியனின் மேற்பரப்பு மீது வெள்ளிக் கிரகம் சென்ற காட்சியை தெளிவாகப் பார்க்கமுடிந்தது.

இந்த அரிய நிகழ்ச்சி 122 ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி நடைபெறுகிறது.

அன்று சூரியனின் வட்ட வடிவமான மேற்பரப்பு வழியாக வெள்ளிக் கிரகம் கடந்து செல்வதைக் காணலாம்.

இதே போன்று அரிய நிகழ்ச்சி அடுத்து 2012ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் திகதிதான் நடைபெறும். எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி வெள்ளிக்கிரகம், சூரியனைக் கடந்து செல்லும் காட்சியை அன்றைய தினம் 'transit of venus. org' என்ற இணையத்தளத்திலும் கண்டு ரசிக்கலாம்.

ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா, கிழக்கு அமெரிக்கா ஆகிய பகுதிகளில் ஜூன் 8ஆம் திகதி வெள்ளியைப் பார்க்க முடியும். சூரியனில் சின்ன புள்ளி வடிவத்தில் அன்றைய தினம் வெள்ளி காணப்படும். (க)

# காரைநகர் முதியோர் இல்லத்துக்கு லண்டனில் இருந்து உதவி

காரைநகர்,ஏப்.26

காரைநகர்மத்தி முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் உள்ள முதியவர்களுக்கு லண்டனில் உள்ள காரைநகர் நலன்புரிச் சங்கத்தினால் புத்தாண்டை முன்னிட்டு உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உடுபுடைவைகளை காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் முதியோர்களிடம் நேரடியாகச் சென்று வழங்கினார் என்று இப்பகுதி கிராமசேவையாளரும் முதியோர் பகல பராமரிப்பு நிலைய நிர்வாகியுமான எஸ்.கே.சிவலிங்கம் தெரிவித்தார்.

லணடன் காரை நலன்புரிச் சங்கத்தினால் மேற்படி நிலையத்திற்கு 52 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவீத்தார். (ஐ-73)

## முறைசாராக் கல்வியாக 'ஸ்கிறீன் பிரிண்டிங்'

காரைநகர்,ஏப்.26

தீவக வலய முறைசாராக் கல்வித திட்டத்தின் கீழ் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் 'ஸ்கிறீன் பிறிண்டிங்' பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துணிகள், பொலித்தீன் உறைகள், ஸ்ரிக்கர் என்பவற்றில் அச்சுப் பதிக்கும் முறையும், அழைப்பிதழ், விளம்பர நோட்டீஸ் ஆகியன செலவின்றி அச்சிடும்முறையும் பயிற்றுவிக்கப்படுவதாகவும், இப்பயிற்சி வகுப்பில் பாடசாலையை விட்டு விலகிய ஆண், பெண் இருபாலாரும் இணைந்து கொள்ளலாம் என பாடசாலை அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார். (ஐ-73)

## ராஜகோபுரம் நிர்மாணிப்பு

சாவகச்சேரி,ஏப்.26

சாவகச்சேரி நகர் வாரிவனேஸ்வரம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய இராஜகோபுர நிர்மாண வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருவதாக ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ வீரபத்திரக்குருக்கள் தெரிவித்தார்.

ஆலய இராஜகோபுரம் ஐந்து தளங்களைக் கொண்டதாக அமைககப்பட்டுள்ளது.

கோபுர நிர்மாணப் பணிகள் இந்திய சிற்பாசாரியர்களால் மேற்கொள்ளபபட்டு வருகின்றன. (ஐ-31)

## விளையாட்டுப்போட்டி

காரைநகர்,ஏப்.26

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று திங்கட கிழமை ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஆர்.றொகான் ராஜசிங்கம் கலந்துகொள்வார். (3-ரி,73)

## கடவுள் சுவாமிகள் 99ஆவது ஜயந்திவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.26

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு கடவுள் சுவாமிகளின் ஜயந்திவிழா நாளை செவ்வாய்க்கிழமை உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் கொண்டாடப்படவுள்ளது. (3)

## அதிபர்களுக்கு வலய ரீதியாகக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.26

பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல்கள் வலய ரீதியாக இன்று முதல் நடைபெறவுள்ளன.

தென்மராட்சி வலய அதிபர்களுக்கு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வடமராட்சி வலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்திலும் -

நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண வலய அதிபர்களுக்கு பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திலும் வலிகாமம் வலய அதிபர்களுக்கு காலை 9.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

தீவகவலய அதிபர்களுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு தீவகக் கல்வி வலயத்திலும் நடைபெறவுள்ளன.

கல்வி, அபிவிருத்தி, பள்ளிகள் கட்டுமானம் தொடர்பாக ஆராயப்படவுள்ளன. இக்கலந்துரையாடல்களில் அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (3-ரி)

# கூட்டுறவுச் சங்கத்தினருக்கு மனித உரிமைக் கருத்தரங்கு

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைதது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக்கருத்தரங்கில் பலநோக்குக கூட்டுறவுச்சங்கங்கள் மற்றும் சமாசங்கள் போன்றவற்றின் தலைவர்கள், உபதலைவர் மற்றும் பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொள்ள வேணடும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி கேட்டுள்ளார். (ஐ-17)

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்



கலையகம் சனசமூக நிலையம், வீனஸ் விளையாட்டுக்கழக முன்னாள் தலைவரும், ஆவரங்கால் கிழக்கு விவசாய சம்மேளன தற்போதைய செயலாளரும், அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழக நிர்வாகசபை உறுப்பினரும், புத்தூர் மணற்பகுதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலனசபைத் தலைவருமாகிய


**உயர்திரு. லயன் இ.சிவஞானம்**

அவர்கள் 14.04.2004 அன்று யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி திரு.K.P.S. வரதராஜா அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ்செய்து கொண்டதையிட்டு நாம் மிகவும் உவகை கொள்வதோடு மணற்பகுதி வாழ் மக்கள் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கலையகம் சனசமூக நிலையம்
வீனஸ் விளையாட்டுக்கழகம்.

மணற்பகுதி, புத்தூர். (31290)(34-14-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் கிழக்கைச் சேர்ந்த

**திரு. தம்பையா கந்தசுவாமி**

(உரிமையாளர், பெஷன் கவுஸ் யாழ்ப்பாணம்)

அவர்கள் 21-04-2004 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி எஸ்.நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றோம். இப்பணியில் மேன்மேலும் சிறப்படைய இறைவன் துணைகொண்டு வாழ வாழ்த்துகிறோம்.

அன்பு நண்பர்களும்,
ஊழியர்களும்.

பெஷன் கவுஸ்,
யாழ்ப்பாணம்..

(31316) (26-14-16-34)

# அகமிக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்

அறுபது அகவையைப் பூர்த்திசெய்து அரசாங்க சேவையிலிருந்து ஓய்வுபெறும் விஞ்ஞானப் பேராசான், விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்

**சதாசிவம் கைலாசபதி** அவர்களை

யா/அல்வாய் சின்னத்தம்பி கல்விச் சமூகம்

*பாராட்டி வாழ்த்துகிறது*

### அறிவுக்கடல்

விஞ்ஞான பாடத்தில் எமது ஆசிரியர்களுக்கு ஐயங்கள் நீக்கும் ஓர் அறிவுக்கடலாக திரு.ச.கைலாசபதி இருந்துள்ளார். தினமும் புதிய விஞ்ஞான ஆங்கில நூல்களை இவர் வாசிக்கும் பழக்கம் இருப்பதால் இவரது விஞ்ஞான அறிவு புதுப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது எனலாம். ஆங்கிலப்புலமையும் விஞ்ஞான பாடப் புலமையும், தன்னடக்கமான அவரது செயற்பாடுகளும் இவ்வாசிரியர்கள் நிறைந்த அவையில் முன்னே வைக்கப்பட்டுள்ளார். தாய், தந்தையற்ற சிலபிள்ளைகள் கற்கும் ஒரு பாடசாலையிலேயே அப்பிள்ளைக்குக் கல்வி கற்பித்து ஈடேறச்செய்த புண்ணியம் அவரை நீண்டகாலம் சுகபலத்துடன் வாழச்செய்யும். அவரது அறுபது அகவையில் ஓய்வுபெறுவது விஞ்ஞான பாட உலகில் ஒரு பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்துகின்றது. எனினும், அவரை வாழ்த்துவதற்குக் கிடைத்த ஒருபேறாகக் கருதி நீண்டகாலம் வாழ்ந்து கல்விப்புலத்துக்கு உழைக்க எனது வாழ்த்துக்கள்.

**வே.தி.செல்வரத்தினம்,**
**வலயக்கல்விப்பணிப்பாளர்,**
**வடமராட்சி.**



மாலை சந்தை ஸ்ரீ வரதராஜா விநாயகர் ஆலய
பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.தேவராஜக்குருக்களின்

### ஆசியுரை

கைலாசபதி ஆசிரியருக்கு ஓய்வு கிடைக்கின்றது என்று ஊரவர்கள் அங்கலாய்கின்றார்கள். இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இவருடைய பேரர் திண்ணைப்பள்ளிக்கூடம் ஆரம்பித்து, சைவமும், தமிழும் தழைத்தோங்க அரும்பாடுபட்டவர். நாவலர் அடியொற்றி வந்து மேதக்க புலவர்மணி சின்னத்தம்பி (சட்டம்பியார்) மகனார் ஆங்கிலப் பேராசான் திரு.சதாசிவம் ஆசிரியர் அன்னாரின் மூத்த மகனாகப் பிறந்த முத்துத்தான் விஞ்ஞானப் பேராசான் **திரு.கைலாசபதியாவார்**. சிறந்த கல்விமான், புத்திஜீவி, அடக்கமானவர், அன்பானவர் பதவியாசையே இல்லாதவர். அவர் தொடர்ந்தும் விஞ்ஞானத்தை மாணவர்களுக்கு வழங்கி கல்விப் பணியாற்றவேண்டும். அவரும் அவரின் குடும்பத்தினரும் பல சிறப்புக்களைப் பெற்று பல்லாண்டு வாழவேண்டுமென்று எல்லாம்வல்ல மாலைசந்தை விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**கிரியா கலாப முக்தாமணி**
**பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச.தேவராஜக்குருக்கள்**
**பிள்ளையார் கோவில், மாலைசந்தி, அல்வாய்.**

### சிறப்பாக வாழ வாழ்த்துகிறேன்

திரு.ச.கைலாசபதி ஆசிரியர் அவர்கள் இன்று தன்னுடைய 60ஆவது வயதைப் பூர்த்திசெய்து ஓய்வுபெறுகின்றார். இவர் விஞ்ஞானம், ஆங்கிலம் எனும் இரு பாடங்களையும் திறமையாகக் கற்பிப்பதில் வல்லவர். கற்பிக்கும் போது மாணவர்களிடத்திலே சலிப்புத்தோன்றாது இருக்கப் பல அறிவியல் கருத்துக்களையும் துணுக்குகளையும் கூறுவார். இக்கல்லூரியின் பெரும் பொறுப்புக்களைச் சுமந்து எனது சுமையைக் குறைத்தவர். பாடசாலைக்கு வரும் படிவங்களையெல்லாம் மிகத் திருப்தியாகச் செய்து கல்லூரியின் நற்பெயரைப் பேணப பெரிதும் உழைத்தவர். அதிபர் என்ற முறையிலும் தனிப்பட்ட முறையிலும் நான் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவரும் அவரது குடும்பத்தினரும் ஓய்வுக்காலத்தைச் சிறப்பாகக் கழிக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**பா.பூரணானந்தம்**
**கல்லூரி அதிபர், யா/சின்னத்தம்பி வித்தியாலயம், அல்வாய்.**

### இனிதுற வாழ வாழ்த்துகிறேன்

திரு.கைலாசபதி ஆசிரியர் இன்று ஓய்வுபெறுகின்றார். இவர் ஒரு சிறந்த கல்விப் பரம்பரையில் தோன்றியவர். நாவன்மையாலும், பரந்த மனப்பான்மையாலும், சமூகத்தொடர்பாலும், ஆக்கபூர்வமான சாதனைகளாலும் வாழ்வாங்கு வாழ்ந்த ஒரு சில ஆசிரியர்களில் இவரும் ஒருவராவார். புன்னகை தவழும் முகம் பல விடயங்களை ஒரே நேரத்தில் அவதானிக்கும் ஆற்றல், தெளிவான பேச்சு, தாய்மையான உள்ளம், இவையாவும் கொண்ட அமைதியான தோற்றம் தான் எமது **கைலாசபதி ஆசிரியர்**. அவரும் அவரது குடும்பத்தினரும் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று இனிதுற வாழ வாழ்த்துகிறேன்.

**முதலியார் M.சுப்பிரமணியம் J.P.,**
**இலகடி, அல்வாய் கிழக்கு.**

(சி-34 45 (34-14-16)

உதயன்

## புலிகள் கேட்பது முன் நிபந்தனை அல்ல

"ஆழமறிந்து காலை விடவேண்டும்" என்பார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைத்துள்ள புதிய அரசுடன் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் விடயத்தில் அதிகமான முன்னெச்சரிக்கையுடன் விடுதலைப் புலிகள் செயற்படுவதைப் பார்க்கும் போது இந்த முதுமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்து, நாட்டிற்கு ஒரு நிரந்தர அமைதியைத் தேடித் தரப்போகிறேன் என வாய்ப்பந்தல் போடும் ஜனாதிபதி சந்திரிகா ஒரு புறமும் -

அமைதிப் பேச்சையும் அதற்கான அனுசரணைப் பணியையும் கடுமையாக விமர்சித்து, பேரினவாதம் பேசும் ஜே.வி.பியினர் மறுபுறமுமாக -

விநோத கூட்டு - விபரீத ஒற்றுமையோடு - அரசு கட்டில் ஏறியிருக்கின்றது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு.

இந்த வித்தியாசமான அணியோடு சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முன்னர், அதன் ஆழத்தையும், அதன் மூலம் அதன் நோக்கத்தையும் அளந்து பார்த்து விட வேண்டியது அத்தியாவசியமானது எனப் புலிகளின் தலைமை கருதுவதில் தப்பில்லை.

இதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோடு 1994-1995 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட - பட்டறிவு - பட்ட அனுபவம் - புலிகளுக்கு உண்டு.

எனவே, தனது உடனடி அரசியல் நலன்களுக்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது அணியினரும் பண்ணக்கூடிய மாய்மாலங்களுக்குச் சுலபமாக எடுபடமாட்டார்கள் புலிகள்.

சமாதான முயற்சிகள் தொடங்க முன்னர் - அல்லது அதனை ஆரம்பிப்பதற்கு முன்னர் - அவை தொடர்பாக அரசுத் தரப்பின் நிலைப்பாட்டைத் தெளிவாக அறிந்துகொள்ள விரும்புகிறார்கள் விடுதலைப் புலிகள். அவர்களின் மதியுரைஞர் பாலசிங்கம் தெரிவித்துள்ள தகவல்கள் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன.

ஆனால், புலிகளின் இந்த நிலைப்பாட்டை - சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முன்னர் சில விடயங்களில் அரசின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துவதை - சமாதான முயற்சிகளுக்கும் சமரசப் பேச்சுகளுக்கும் புலிகள் விதிக்கும் முன் நிபந்தனையாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பு காட்ட முயலும் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், புலிகள் விதிப்பது நிபந்தனை அல்ல. பழைய விடயங்களைத் தெளிவுபடுத்தக் கோரும் ஓர் எதிர்பார்ப்பு. அவ்வளவே.

கடந்த அரசு புலிகளோடு நடத்திய சமரச முயற்சிகளை, அந்த அரசை திடீரெனக் கலைத்ததன் மூலம், அந்தரத்தில் தொங்கவிட்டார் ஜனாதிபதி.

இப்போது அந்த முயற்சிகள் எங்கிருந்து தொடங்கப் போகின்றன என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறார்கள் புலிகள். அதற்கு மேல் ஒன்றுமில்லை.

கடந்த அரசு, ஈழத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாகப் புலிகளை ஏற்றுக்கொண்டு, பேச்சுக்களில் அவர்களை சமபங்காளிகளாக்கி, கௌரவத்துடனும, மதிப்புடனும், சுதந்திரமாகவும் அவர்கள் அதில் பங்குபற்றக் கூடிய நிலையை ஏற்படுத்தி, அமைதி முயற்சிகளைத் தொடர்ந்தது. அது மட்டுமல்லாமல், இந்த சமாதான முயற்சிகளுக்கு சமாந்தரமாகப் பல கட்சிகளுடனும், பல தரப்புகளுடனும் பேச்சுக்களை முன்னெடுத்து, பேச்சு முயற்சியைச் சாம்பாறாக்கும் நடவடிக்கையிலும் அது ஈடுபடவில்லை.

இத்தகைய ஒரு நிலைப்பாட்டோடு இந்தப் புதிய அரசும் பேச்சுக்கு வந்தால்தான், அது சமாதான முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடங்குவதாக இருக்கும்.

எனவே, அந்த இடத்திலிருந்து சமாதான முயற்சகளைத் தொடங்குவதற்கு முன்னர் முன்னைய அரசின நிலைப்பாட்டில்தான் புதிய அரசும் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளவேண்டிய தேவை - கட்டாயம் - அவசியம் - புலிகளுக்கு உண்டு.

அது மட்டுமல்ல முன்னைய அரசின் காலத்தில் சமாதான முயற்சிகளின் கடைசி அம்சமாக வடக்கு - கிழக்கில் இடைக்காலத்தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை நிறுவுவதற்கான யோசனை புலிகளால் முன்வைக்கப்பட்டது.

அதன் பின்னர் வந்த பொதுத் தேர்தலில் அந்த யோசனையை ஏற்று, அது குறித்துப் புலிகளுடன் பேசி இணக்கம்காண, அரசு முன்வரவேண்டும் என்பதைத் தங்கள் ஆணையாகத் தமிழ் மக்கள் முன்வைத்துள்ளனர்.

முன்னைய அரசுடன் இடைநிறுத்தப்பட்ட சமரச முயற்சிகளின் போது கடைசியாகச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனை குறித்து, சமாதான முயற்சிகளைப் புதிதாக முன்னெடுக்கப் போகும் ஐ.ம.சு. கூட்டமைபு அரசு என்ன கருதுகிறது என்பதைப் புலிகள் அறிய முற்படுவதை பேச்சுக்கான முன்நிபந்தனையாகக் கருதமுடியாது.

பேச்சு முயற்சிக்கான - சமரச' எத்தனத்துக்கான - முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வேண்டுமானால இதனைக்கொள்ளலாம்.

# முதலாந்தவணை முடிவடைந்தும்கூட மாணவருக்குச் சீருடை கிடைக்கவில்லை

### பெற்றோர்கள் அதிருப்தி

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் இதுவரை வழங்கப்படாததால் மாணவர்களும், பெற்றோர்களும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இவ்வாண்டுக்கான பாடசாலை மாணவர்களின் சீருடைத் துணி விநியோகம் கடந்த ஜனவரி மாதம் வழங்கப்படுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது.

முன்னோடியாகக் கொழும்பு நகரில் கடந்த ஜனவரி மாதம் பாடசாலைகளில் கல்வி அமைச்சர் உட்பட கல்வித்திணைக்கள அதிகாரிகளால் சீருடைத்துணிகள் வழங்கப்பட்டன.

ஆனால், யாழ். மாவட்டத்தில் பாடசாலைகள் இவ்வாண்டு ஆரம்பமாகி முதலாந் தவணை விடுமுறை முடிந்து இரண்டாம் தவணைக்குப் பாடசாலைகள் ஆரம்பிக்கவிருக்கும் இவ்வேளையிலும்கூட பாடசாலை மாணவர்களுக்குச் சீருடையை வழங்குவதற்கு எந்த வகையான நடவடிக்கைகளையும் உரிய அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டு மாணவர்களின் பாடசாலைப் புத்தகங்களும் கூட இன்னும் முழுமையான அளவில் விநியோகம் செய்யப்படாமல் இருப்பதாகவும் - சுட்டிக்காட்டப்படுகின்றது.

சிறுவர் உரிமைகள் பற்றிப் பேசுபவர்கள், பிரசாரம் செய்யும் அமைப்புக்கள் இம்மாணவர்களின் அடிப்படை உரிமையான புத்தகங்கள் மற்றும் சீருடைத் துணிகள் கிடைப்பதற்கு முன்நின்று உழைக்க வேண்டும் எனவும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

போக்குவரத்து வசதி சீராக இருக்கும் தற்போதைய சூழலிலும கூட, உரிய காலத்தில் புத்தகங்கள், சீருடைகள் கிடைக்காமற் போவதற்கு அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமா அல்லது அரசின் அக்கறையின்மை காரணமா என்றும் பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஐ-86-ரி)

# லொக்குபண்டாராவின் தெரிவு அரசுக்கு பெரும்சங்கடமாகவே இருக்கப்போகிறது

### ஆளும்தரப்பினர் மத்தியில் கவலை எழுகிறது

கொழும்பு,ஏப்.26

சபாநாயகர் பதவிக்கு எதிர்க்கட்சியிலிருந்து லொக்குபண்டாரா தெரிவுசெய்யப்பட்டிருப்பதானது எ'க்குப் பெரும் சங்கடமாகவே இருக்கப்போகிறது. 13ஆவது நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணயசபையாக மாற்றுவதென்ற புதிய அரசின் பிரயத்தனங்கள் எல்லாம் பெரும் முட்டுக்கட்டைகளையே எதிர்நோக்கப் போகின்றன.

- இவ்வாறு கவலை தெரிவிக்கின்றார்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பலர்.

அரசமைப்பில் மாற்றங்கள் செய்வதென்ற அரசின் முயற்சிகள் பெரும் தடங்கல்களுக்கு உள்ளாக நேரும் என்பதை ஒத்துக்கொள்ளும் அவ்வட்டாரங்கள், கம்யூனிஸ் கட்சியைச் சேர்ந்த டி.ஈ.டபிள்யு. குணவர்த்தன தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் தங்களுக்குப் பெரும் உதவியாகவிருந்திருக்கும் என்கிறார்கள்.

நாடாளுமன்றம் அரசியல் அமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்படுமானால் சபாநாயகர் தானாகவே அச்சபையின் தலைவராகிவிடுவார்.

மேலும் பொலீஸ், அரசசேவை, நீதி மற்றும் தேர்தல் ஆகிய நான்கு சுதந்திர ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை சிபார்சு செய்யும் அதிகாரங்களைக் கொண்டதும் 10 உறுப்பினர்களைக கொண்டதுமான அரசமைப்புக் குழுவுக்கும் சபாநாயகரே தலைவராவார்.

அரசமைப்பு நிர்ணயசபையை அவசரமாக உருவாக்குவது தற்போதைக்கு நாட்டுக்குத் தேவையில்லாத ஒருவிடயம் என ஐ.தே.முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜாதிக ஹெறல உறுமய போன்ற கட்சிகள் ஏற்கனவே பகிரங்கமாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை அரசமைப்பில் மாற்றங்களைச் செய்ய முயல்வது அரச கட்சிகளின் சொந்த நலன்களைப் பேணுவதற்கே என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, தேசிய ஹெறல உறுமயவுக்கு மாறாகச் செயற்பட்ட இரு பிக்கு எம்.பிக்களையும் கட்சியிலிருந்து நீக்கவும் அவர்களின் இடத்தில் வேறு இரு பிக்குகளை நியமிக்கவும் ஹெறல உறுமய நடவடிக்கை எடுத்துவருகிறது. (ப)

# சிறுவர் மீதான பெற்றோரின் அக்கறையின்மை அவர்களை வன்முறைக்கு இட்டுச் செல்லலாம்!

### குடும்பவளத்துணை நிலையக் கருத்தரங்கில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

குடும்பங்களில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் செயற்பாடுகளில் அக்கறை குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

- இவ்வாறு யாழ்ப்பாணம் அகவொளி குடும்ப வளத்துணை நிலைய இயக்குநர் அருட்திரு. எஸ்.ஜே. இராசநாயகம் தெரிவித்தார். கடந்த வாரம் மேற்படி நிலையத்தில இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இன்றைய சமூகத்தில் சிறார்கள் வன்முறைகளில் ஈடுபடும் குணவியல்புகளைக் கொண்டுள்ளனர். பெற்றோர்கள் தமது பிளளைகளில் அக்கறை குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இது வன்முறைகள் மலிந்த சமூகத்தை எதிர்காலத்தில் உருவாக்கும்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளில், அவர்களின் நடத்தைகளில் அக்கறை கொண்டவர்களாக இருக்கவேண்டும். பொறுப்பு மிகுந்த பெற்றோர்களினால்தான் ஆரோக்கியமான சிறார்களை உருவாக்க முடியும்.

எமது சமூகத்தின் பொருளாதார ரீதியாகப் பல பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன. சீதனம் போன்ற பல கொடுமைகள் எமது சமூகத்தில் தலைவிரித்தாடுகின்றன. வெளிநாட்டுத் திருமணங்கள் என்ற பெயரில் பல பெண்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். யாழ். குடாநாட்டில் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. வெளிநாட்டில் திருமணம் செய்த ஆண ஒருவர் யாழ்ப்பாணத்திலும் திருமணம் செய்யும் நிலையில் பல பெண்களின் எதிர்கால வாழ்வு சீரழிக்கப்படுகிறது. வெளிநாடு செல்லும் பெண்களும் கணிசமான அளவு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். மேலும் எங்கள் சமூக வாழ்வு தனிப்பட்ட குடும்பங்களின் வலுவான வாழ்வு முறையினால் மேன்மை அடையும். சமூக வாழ்வு என்பது ஒவ்வொரு குடும்ப வாழ்வுகளினதும் சிறப்பினால் தீர்மானிக்கப்படுகின்றது. குடும்ப வாழ்வுகள் சிறக்கும்போதுதான் சமூக வாழ்வும் மேன்மையடையும் - என்று தெரிவித்தார். (ஐ-12)

# கல்வி ஆய்வு நிறுவனத்தின் கிளை ஆனைக்கோட்டையில்

### இன்று வைபவரீதியாகத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

வெளிநாடுகளின் நிதியுதவியுடன் கிராமியப் பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (REERDO) குடாநாட்டின் பல இடங்களிலும் தனது கிளைகளை நிறுவிவருகிறது. இதன் தலைமையகம் கிளிநொச்சியில் உள்ளது.

இன்று திங்கட்கிழமை குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டையில் முற்பகல் 10 மணிக்கு இதன் கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியும் மலிய சர்மாவும் சிறப்பு விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இளைஞர், யுவதிகளிடையே இலவச தொழிற்பயிற்சிகளை ஊக்குவிப்பதும் போரினால பாதிக்கப்பட்டு அடைவுநிலை குறைந்த மாணவர்களிடையே கல்வி ஊக்குவிப்பை ஏற்படுத்துவதும் இந்த நிறுவனத்தின் முக்கியநோக்கம் என அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மரங்களின் முக்கியத்துவம் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வின்மை

### வனத்திணைக்கள அதிகாரி கவலை

யாழ்ப்பாணம்,ஏப்26

மரங்களின் முக்கியத்துவம் பற்றி மக்கள் பெரியளவில் அக்கறை செலுத்துவதில்லை.

- இவ்வாறு யாழ். மாவட்ட வனத்திணைக்கள அதிகாரி மு பிரபாகரன் தெரிவித்தார்

இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்படுவது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோது அவர் மேலும் கூறியதாவது:-

எங்கள் வாழ்வியலில் சூழல் முக்கியமானது. இச்சூழலைப் பேணுவதில் மரங்களின் பங்கு கூடுதலானது. எமது மக்கள் மரங்களின் முக்கியத்துவம் தெரியாது மரங்களையும் அவற்றின் கிளைகளையும் கண்டபடி அழித்து வருவது வேதனைக்குரியது.

எமது மக்கள் அழிக்கும் மரங்களுக்குப் பதிலீடாகப் புதிதாக மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதன் மூலம் பெரும் பயனைப் பெறலாம் சூழல் பாதிப்புக்களில் இருந்தும் பாதுகாப்புப்பெறலாம்.

மரங்கள் கண்டபடி அழிக்கப்படுவதினால் மழைவீழ்ச்சி கூட குறைந்து காணப்படுகிறது. - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ். மாவட்ட வனத்திணைக்களம் கடந்த மூன்று மாதங்களில் 1136 மரக்கன்றுகளை பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும பொதுநிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளது.

ஜனவரி மாதத்தில் 486 மரக்கன்றுகளையும் பெப்ரவரி மாதத்தில் 450 மரக்கன்றுகளையும் மார்ச் மாதத்தில் 200 மரக்கன்றுகளையும் வழங்கியுள்ளது.

தற்போது வனத்திணைக்களத்தில் 4 ஆயிரம் வரையான வேம்பு, தேக்கு, பலா உட்பட பல வகையான மரக்கன்றுகள் உள்ளன.

இந்த மரக்கன்றுகள் பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது என வனத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-12)

### நாளை

சித்திரை 15
செவ்வாக்கிழமை
(27.04.2004)
திதி : சப்தமி
காலை 07.15 வரை
நட்சத்திரம்: பூசம்
பின்இரவு 01.25 வரை
சுபநேரம்: 10.29-11.59
ராகுகாலம்: 2.59-4.29
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மரணத்தைக் கண்டு கலங்காதே அது நிச்சயமானது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## மெக்லண்ட் டானியல் அற்புதராசா

(உரிமையாளர், பேபி மினிபஸ், பேபி தொலைத் தொடர்புசேவை
தலைவர், தென்மராட்சி சிற்றூர்திச் சேவைகள் சங்கம்)

மலர்வு 02.07.1948 உதிர்வு 23.04.2003

திதி: 26.04.2004

வேண்டும் போது எம் துயர் துடைத்து
வாழ்வில் இன்பந் தந்திடும் பிதாவே!
பூண்ட கருமம் பொலிவுற முடிப்பவரே
பூவுலகில் புகழ்பூத்த கோமானே!
மாண்டும் புகழ் மங்கா மன்மதனே
மாநிலத்தில் எந்நாளும் நாங்கள்
ஆண்டு பல சென்றாலும் ஐயாவே!
ஆசை மிகு உம் நினைவு மறையாது!

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. (31305)(34-14-16-24) - குடும்பத்தினர்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.26

க.பொ.த. உயர்தரத்தில் சமஸ்கிருதத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரை மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-ரி)

## பயிற்சி நிலையம் திறப்புவிழா

பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணிப்பயிற்சி நிலையமொன்று இன்று திங்கட்கிழமை காரைநகர் தோப்புக்காட்டுப் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தத் திறப்பு விழாவில் காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கைப்பணிப்பயிற்சி நிலையத்தைத் திறந்துவைப்பார்.

(3-ரி-73)


### டிஜிற்றல் இமேஜ்

டிஜிற்றல் அல்ப வேலைகளை
அதி உயர் தரத்துடன் குறைந்த
செலவில் செய்து பெற்றுக்கொள்ள
யாழ். ஒளி வீடியோ
புகைப்பட சேவை
(K.S.R.PHOTOS)
யாழ்ப்பாணம்.
இல.05, கனகபுரம் வீதி,
(37) கிளிநொச்சி. (31173)



### விற்பனைக்கு

கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. உயரம் 3', நீளம் 5' அகலம் 20" 2 தட்டுக்கள் கொண்டவை.

த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
44, 42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(31251) (40-24-14-16)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது விளையாட்டுக்கழக உறுப்பினர்
திருமதி பிரபாகரன் புஸ்பராணி
அவர்களின் அருமைத் தாயார்
திருமதி செல்வத்துரை யோகம்மா
(சரஸ்வதி)

தோற்றம் 15.06.1942 மறைவு 26.03.2004

அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த கவலையைத் தருகின்றது. இன்றைய 31ஆம் நாளில் அவரை நினைவுகூர்வதுடன் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி நகர்,
சாவகச்சேரி.
(31293) (34-14-16-24)

ஸ்ரீதாஸ் பொழுதுபோக்கு
விளையாட்டுக்கழகம்.

# ஈரிரு ஆண்டில் இணையிலா நினைவுகள்

மண்ணுக்கு 20 - 08 - 1981



விண்ணுக்கு 26 - 04 - 2000

## வீரவேங்கை விதுஷன்

(பிரேமவாசன் பிரேம்குமார்)

ஓய்ந்தாலும் உயிர்த் துடிப்பு
உன்வீரம் உயிர் வாழும்
பாய்ந்துவரும் பகைக ளெலாம்
பகலவனால் நீ றாகும்!

வெங்கொடுமைச் சாக் காட்டை
விளையாடி வென் றவனே!
தங்குமெழில் கொஞ் சிடவே
தமிழீழம் விஞ்சி வரும்!

தணியாத உன் தாகம்
தமிழினத்தின் மன வேகம்
தணிவுடனே நீ சென்றாய்
தவழுகிறோம் நா மிங்கே!

- குடும்பத்தினர்
தந்தை, தாய்
தம்பி: பி.பிரேம்ராஜ்.

பெரியபளை, பளை. (C/34652)(34-14-16-24)

# நெஞ்சகலா முதலாம் வருட இதய அஞ்சலி



## அமரர் லயன் சின்னத்துரை யோகராசா

கிராம அலுவலர் J/78 அத்தியடி
(முன்னாள் கிராம அலுவலர், சாவகச்சேரி வடக்கு J/303)

தோற்றம் :-12.02.1958
மறைவு :-08.05.2003
திதி :-26.04.2004 ஸப்தமி

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை.
ஆண்டொன்று ஆனதையா - உம்
மறவாத நினைவுதனை மனதிலே வரைந்து
கொண்டு
தவறாமல் உமையே தினம் தினம்
எண்ணுகின்றேன்.
பாழும் விதியது உமைச் சூழ்ந்து கொண்டதால்
நீர் எனை மறந்த சோகத்தை
நினைக்கும் தோறும் நெஞ்சம் தடுமாறி
சுயம் இழந்து நிற்கின்றேன்.
இதயமது அழுது கொட்டும்
கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்கி
உம் ஆத்மசாந்திக்காக
இறைவனை பிரார்த்தித்து நிற்கின்றேன்.

இல 59, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி யோ.ராகினி
மற்றும் குடும்பத்தினர்.

குறிப்பு :- உற்றார், உறவினர், நண்பர்களை இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# குடாநாட்டின் கல்விசார் பிரச்சினைகளும் அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்களும்

**யாழ். குடாநாட்டில் கல்வித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், அதனை நிவர்த்திசெய்து கல்வித்துறையை அபிவிருத்தி நோக்கி முன்னெடுப்பதற்கு செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்கின்றது இக்கட்டுரை.**

**கடந்த 19ஆம் திகதி 'உதயனில்' வெளியான கட்டுரையின் இரண்டாம் பகுதி வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இன்று பிரசுரமாகிறது.**

ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதற்கு ஆசிரியர்களைப் பயிற்சிக்கு உள்வாங்குவதில் அரசு காட்டும் அக்கறையின்மையும், நாட்டின் பொருளாதார் மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும், அரசியல் தலையீடுகளும் ஆசிரியர்களின் மனப்பாங்கும் முக்கிய காரணமாக அமைகிறது. அத்துடன், பாடசாலை வளங்களில் காணப்படும் உயர்வு, தாழ்வும் கிராம, நகர வேறுபாடுகளும் ஆசிரியர்கள் பாடசாலையில் வேலை செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகின்றன. பொதுவாக, ஆசிரியர்கள் நகரப் புறப் பாடசாலைகளில் கற்பித்தலில் ஈடுபடக்கூடிய விருப்பம் காட்டுவதால் பிரதேச மட்டத்தில் சமநிலை அற்ற ஆசிரியர் வளம் பகிரப்படும் துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதுடன், பின்தங்கிய பிரதேசக் கல்வி நிலை கீழ் மட்ட அடைவு நிலைக்குச் செல்லுல் தவிர்க்கமுடியாததாகின்றது.

ஆசிரிய வளநிலை பற்றி யாழ். மாவட்ட நிலையை அட்டவணை **IX** வலய ரீதியில் அவர்களின் தரவு அடிப படையில் காட்டிநிற்கின்றது.

ளில் பாடசாலை அனுமதி குறைவடைநதும், நகரப் பாடசாலைகளில் மாணவர் அனுமதியில் போட்டித் தன்மையையும் நாம் காணமுடிகின்றது. இதற்குப் பெற்றோர்களின் தவறான கணிப்பீடும், நாட்டில் ஏற்பட்டுள்ள பிறப்புவீத வீழ்சியும் மிக முக்கிய காரணிகளாக அமைகின்றன.

கல்வி சார் செயற்பாடுகளில் மாணவா எண்ணிக்கை குறைவடைகின்றமைக்கு வறுமை மற்றும் பொருளாதார, சமூக அமைப்புக்களும், பாடசாலை மட்ட ஒழுங்கமைப்புக்களும் அவற்றினுடைய செயற்பாடுகளின் வடிவமைப்பும் செல்வாக்குச் செலுத்தச் சந்தர்ப்பமுண்டு. அத்துடன், கிராமத்தை தாழ்வாகவும் நகரத்தை உயர்வாகவும் நினைக்கும் மனப்பாங்கை பெற்றோர் கூடியளவு கொண்டிருப்பதாலும் பாடசாலை மாணவர்களின் அனுமதி மடட்ங்களில் வித்தியாசம் ஏற்படுகின்றது.

குடாநாட்டைப் பொறுத்தமட்டில் கல்விக்கும், தொழில்வாய்ப்புக்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதுடன் இத்தன்மை எமது நாட்டின் முழுப பிரச்சினையாகவே சமகாலத்தில்

அட்டவணை IX

| வலயம் | ஆசிரியர்கள் | | | | தொண்டர் ஆசிரியர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | பட்டதாரி | பயிற்றப் பட்டோர் | சான்றிதழ் | சான்றிதழ் அல்லாதோர் | | |
| யாழ்ப்பாணம் | 661 | 981 | 60 | 276 | 118 | 2096 |
| வலிகாமம் | 508 | 819 | 24 | 329 | 171 | 1851 |
| வடமராட்சி | 346 | 548 | 10 | 193 | 10 | 1107 |
| தென்மராட்சி | 319 | 427 | 34 | 104 | - | 884 |
| தீவகம் | 109 | 188 | 50 | - | 143 | 490 |
| மொத்தம் | 1943 | 2963 | 178 | 902 | 442 | 6428 |

(நன்றி : வலயப் பணிமனை 2001)

நாடு முழுவதற்கும் ஆசிரிய வளஆளணியினரைத் திட்டமிடுவதில் பாடசால்லகளின் தர அடிப்படையும், மாணவர்களின் எண்ணிக்கையும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்த வகையில், மாகாண அடிப்படையில் எதிர்வுகூறப்பட்ட ஆசிரிய வளம் பற்றிய தரவைக் காட்டுவதாக அட்டவணை X அமைகின்றது.

கவனத்தில் கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாண வேலை வங்கியில் 2001 ஆம் ஆண்டு பதிவுசெய்தோர் எண்ணிக்கை 22,958 ஆகும். ஒவ்வொரு வருடமும் பாடசாலை அமைப்பினுள் பிரவேசிக்கின்ற கிட்டத்தட்ட 400,000 பிள்ளைகளில் 1.8 வீதத்தினர் மட்டுமே பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்கின்றனர். மிகுதி 98.2 வீதத்தினரும்

அட்டவணை X

| மாகாணம் | 2001ஆம் ஆண்டில் தேவையான ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை | 2003ஆம் ஆண்டில் தேவையான ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் | 36,924 | 35,353 |
| மத்திய | 24,078 | 23,054 |
| தென் | 23,543 | 22,581 |
| வடக்கு | 10,248 | 9,804 |
| கிழக்கு | 14,667 | 13,994 |
| வடமேல் | 22,539 | 22,252 |
| வடமத்திய | 11,883 | 11,372 |
| ஊவா | 12,898 | 12,350 |
| சப்பிரகமுவ | 18,014 | 17,240 |
| மொத்தம் | 174,791 | 168,000 |

(நன்றி : கல்வி உயர்கல்வி அமைச்சு 2002)

ஆசிரியர் வளம் நாட்டின் ஒவ்வொரு பிரதேச அடிப்படையையும் கருத்திற்கொண்டும், மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படை விகிதத்திலும் பகிரப்படும் பொழுதும், ஒழுங்குமுறையிலான நடைமுறை கடைப்பிடிக்கும் பொழுதும் ஆசிரியர் பற்றாக்குறை இடம்பெற சந்தர்ப்பம் குறைவு. மேலும், ஆசிரியர் வளம் பகிர்தலில் அரசியல் மற்றும் பொருளாதார, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு சுதந்திரமான நடைமுறை அமுல்படுத்தப்படல் மிகவும் அவசியமாகின்றது.

அண்மையில்கூட வடக்கு - கிழக்கில் 7272 ஆசிரியர் வள வெற்றிடம் இருப்பதாகவும் அதில் ஆங்கிலமொழி ஆசிரியர்கள் தேவை 1262 என்றும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள தகவல் வடக்கு - கிழக்கு பிரதேச ஆசிரிய வளம் பற்றிய பிரச்சினையை நிரூபிப்பதாக அமைகின்றது.

நாட்டின் கல்விசார் நடவடிக்கையில் பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்கப்படுவது அண்மைக்காலங்களில் குறைவடைந்து வருவதை நாம் இன்று அவதானிக்கமுடிகின்றது. நகரம், கிராமம் என்ற அடிப்படையில் மாணவர் அனுமதி வேறுபட்டு அமைவதையும் இங்கு நாம் கவனத்திற்கொள்ளுதல் அவசியம். கிராமப் புறங்க

வேலைவாய்ப்புச் சந்தைக்குள் பிரவேசிக்கின்றனர். அல்லது வேறு தொழில வாய்ப்புச் சார்ந்த கல்விக்குச் செல்கின்றனர்.

பாடசாலைக் கல்வி அமைப்பினூடாகப் பெறும் ஆற்றலுக்கும் பின்னர் வேலைவாய்ப்புக்கு உட்படுத்தப்படுவதற்குத் தேவைப்படும் ஆற்றலுக்கும் இடையில் நிறைய வேறுபாடு காணப்படுவதாலும் தொழில்நுட்பம் சார் கல்வி அறிவை விருத்தி செய்யாமை மற்றும் ஆங்கிலமொழி பரீட்சயமின்மை போன்றவற்றால் வேலை வாய்ப்பைப் பெறுதல் கடினமாக அமைவதைக் காணமுடிகின்றது. இவற்றைக் கருத்தேற்றமாகக் கொண்டு வேலை வாய்ப்பைப் பெறக்கூடிய கல்வி ஒழுங்கமைப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகின்றது. இல்லாவிடில் நாட்டில் பல்வேறுபட்ட குழப்பங்கள், பொருளாதாரப் பின்னடைவுகள் ஏற்பட இவை காரணமாகிவிடும்.

சமகாலத்தில் அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன பல்வேறு பயிற்சிச் செயற்பாடுகளையும், செயலமர்வுகளையும் இடம்பெறச் செய்வதையும் கல்விச் சீர்திருத்த அமைப்பில் தொழில்சார் கல்வித்துறைக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுப்பதையும் காணலாம். விஞ்ஞானத்துறையைப் பொறுத்த மட்டில் கற்றல் சமுதாய மாதிரி (**Community of Learners Model**) என்ற புதிய அணுகுமுறை எதிர்பார்க்கப்படுவதுடன், ஆராயும் செயன்முறையாக (**Inquiry Process**) செயல்வடிவமாக விஞ்ஞான தொழில்நுட்பப் பாடம் மாற்றம்பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பிள்ளைகளின் அறிவு, சமூக மயமாக்கல், ஆற்றல் விருத்தியில் முன்பிள்ளைப் பருவம் என்பன மிகவும் முக்கியம் பெறுகின்றன. அந்தவகையில், முன்பள்ளி அபிவிருத்தி நாட்டில் முன்னைய காலத்தில் முக்கியத்துவப்படுத்தப்படாவிடினும் இன்று ஓர் ஒழுங்கமைநத நிறுவனமாக மாறறப்பட்டுவருவதைக் காணமுடிகின்றது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் 15,509 இற்கும் அதிகமான குழந்தைகளுக்கு சேவை செய்கின்ற




583 பதிவுசெய்யப்பட்ட முன்பள்ளிகள 852 ஆசிரியர்களுடன் இயங்கிவருகின்றன.

இந்த முன்பள்ளிகளுக்கு ஆசிரிய வள ஆளணி பௌதிக வளம் என்ற பல்வேறு இடர்பாடுகள், பிரச்சினைகள ஏற்படுகின்றன.

முன்பள்ளி செல்லவேண்டிய பிள்ளைகளில் 1/3 பகுதிக்கு மேலானோர் முன்பள்ளிக்குச் செல்வதில்லை, பயிற்றப்பட்ட ஆசிரியர் வள இன்மை, பெற்றோரிடம் இக்கல்வி அறிவின் முக்கியத்துவம் உணரப்படாமை என பன இதற்கான முக்கிய பிரச்சினையாக அமைகின்றன. சர்வோதயம் **SCF, UNICEF, HUDEC,GTZ** வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, முன்பள்ளி வள நிலையம் என்பன யாழ் மாவட்டத்தில் தற்போது முன் பள்ள் மேம்பாட்டுத் திட்டங்களில் அதிகளவில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது.

**ப.இராஜேஸ்வரன்**
**ஆசிரியர்**

முன்பள்ளிக் கல்வியை விருத்தி செய்வதில் அக்கறையின்மையால் பிள்ளையின் ஆரம்ப, உயர்கல்விப் பாதிப்படைவதுடன் முன்பள்ளிப் பருவத்தில பிள்ளை அடையவேண்டிய தேர்ச்சியை அடையமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகின்றது. இது பிற்காலத்தில் ஆரம்ப நிலையில் கல்வி கற்பிகக்கும் ஆசிரியருக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புண்டு. ஓர் ஒழுங்கமைந்த பாடசாலைக் கட்டமைப்பு ஒரு பிள்ளையை முதனமுதல் சமூக மயபபடுத்தும் தளமாக அமைவதால் அதில் ஏற்படும் பின்னடைவு பிள்ளை பாடசாலைக்குச் சென்று ஏனையோருடன் சமூகமயப்படுவதற்குத் தயங்கும் நிலையும் உருவாகலாம்.

யாழ்.குடாநாட்டில் மாணவர்களை ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை மடடங்களில் அனுமதிக்கும்பொழுது பல வேறு மட்டங்களிலிருந்தும் சலுகைகள், அறிமுகம், பணவசூலிப்பு இடம் பெறுதல் சர்வசாதாரணமாகிவிட்டன. இலங்கையில் இலவசக் கல்வியை நடைமுறைப்படுத்தியமை மற்றும் கல்வியின் தேசியக் கொள்கைப்பரவலாக்கம் பற்றிப் பேசும் அரசியல்வாதிகள் மற்றும் கல்வியியலாளர்கள், கல்வி அதிகாரிகள் சேர்நது இயங்குவதும் இங்கு சுட்டிக்காடடப்பட வேணடியமை முக்கியமாகும்.

பொதுவாக 'டோனேசன்' என்ற பெயரில் 15,000 ரூபா முதல் 25,000 ரூபா வரை நகரப்புறம், கிராமப்புறம், என்ற வேறுபாடில்லாமல் அன்பளிப்பு என்ற புனிதமான சொல்லைப் பயன்படுத்தி கல்வியியலாளர்கள் பணம் வசூலிப்பில் ஈடுபடுகிறார்கள்.

'டொனேசன்' வாங்குவதில் ஈடுபடும் பாடசாலைகள் ஓர் திட்டமிட்டமுறையிலும், கல்விசார் அதிகாரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையிலும், சட்டச் சிக்கலிலிருந்து தம்மைப் பாதுகாககும் வகையிலும் தமது செயறபாடுகளை சமூகத்தின் பல்வேறு அங்கத்தவரை உறுப்பினராகக் கொண்ட குழு அமைப்பு மூலம் மேற்கொள்வதைக் காணலாம். இக்குழுவில் பல கலைக்கழகத்தில் படித்த கல்வியியலாளர்களும, பிர ுல வ் ந்தகர்களும், கிராமசேவையாளர்களும் இடம்பெறுவதையும் நாம் அநேகமாக அவதானிக்கலாம். *(வளரும்)*

## கல்விச்சாலைக் காட்சிகள்




சிறுவிளானில் மீள நிர்மாணிக்கப்பட்டு சமீபத்தில் திறந்து வைக்கப்பட்ட கனகசபை வித்தியாலயத்தின் திறப்புவிழாவில் எடுக்கப்பட்ட படம் இது. இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இதயநாதன் உரைநிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் க.யதீதரன், சண்டிலிப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம், பண்டிதர் எஸ்.ராஜரட்ணம், ஆசிரிய ஆலோசகர் எஸ். குகவேள் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*



சாவகச்சேரி சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாபூஷணம் அராலியூர் த.சுந்தரம்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அதிபர் மு.பாலசுப்பிரமணியம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.கைலைநாதன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் ஒருவருக்கு விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். கனகரத்தினம் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*



யாழ்.சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்திற்கு ஹொலண்ட் நாட்டின் தமிழ்ச் சங்கத்தால் ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்களும், சீருடைத்துணிகளும் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். ஹொலண்ட் நாட்டு தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த திருமதி ரவீந்திரன் மைக்கல்பிள்ளை, வித்தியாலய அதிபர் திருமதி பி.எவ்.சின்னத்துரையிடம் பொருள்களை வழங்குவதையும் அருகில் முன்னாள் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரியும் மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுநருமான திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் நிற்பதையும் படத்தில காணலாம். (5)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

தரமான நம்பர் - 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 28-04-2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி T.P.: No. 2867, 3529, P.ரவி, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31277)

நந்தாவில் அம்மன் கோயில் முன்பாக 3500 சதுர அடி கொண்ட வீடு, 4½ பரப்பு காணி, தனிமையான கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கி.செந்தில், நந்தாவில் அம்மன் கோயிலடி முன்பாக, கொக்குவில். (31289)

கலப்பின் ஆண் நாய், Sony Erricson கைத்தொலைபேசி, மூடித் திறக்கும் கைத்தொலைபேசி, Stand உள்ள விளம்பரப்பலகை விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு: S.மகேந்திரன், 284, நாவலர் வீதி (இராசாவின தோட்டம் வீதிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (31294)

### வாடகைக்கு

யாழ்.பிரதான வீதிக்கு அருகில் மாடிவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், வைத்தியசாலை முதலிய வற்றுக்கு ஏற்றது. தொடர்பு: 10A, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 222 5687.

(31317)

## மினி பஸ்ஸில் ஓடி ஏறியவர் வீழ்ந்து காயம்!

யாழ்ப்பாணம்,ஏப்.26

தரிப்பிடத்தில் இருந்து புறப்பட்ட மினி பஸ்ஸில் ஓடி ஏறியவேளை தவறிவிழுந்து ஒருவர் தலையிலும், கை, கால்களிலும் படுகாயமடைந்தார்.

உரும்பிராய்ப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி ஈசன் (வயது40) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## புனரமைப்புக்கான நிதி மதிப்பீடு

யாழ்ப்பாணம்,ஏப்.26

போரின்போது அழிக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபை அலுவலகக் கட்டடத்தினைப் புனரமைப்பதற்கு 10 லட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாக மதிப்பீடுகள் செய்யப்பட்டுளளன.

தற்போது இலக்கம் 53, கண்டி வீதியில் தற்காலிகமாக இப்பணிமனை இடநெருக்கடிகளுடன் இயங்கி வருகிறது.

(ஐ-12)

## குடிதண்ணீர் விநியோகிக்கத் தண்ணீர்த் தொட்டி

தென்மராட்சி, ஏப.26

தென்மராட்சி தெற்கு, மறவன் புலோ, கோவிலாக்கண்டி, கைதடி நாவற்குழி ஆகிய இடங்களில் மீளக் குடியமர்ந்துவரும் மக்களின் குடிதண்ணீர் தேவைக்கென மூன்று பிளாஸ்ரிக தண்ணீர் தொட்டிகளை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் வழங்கியுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள இந்தத் தண்ணீர்த் தொட்டிக்கு படையினர் பௌசர் மூலம் தண்ணீர் வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## புங்குடுதீவில் மின்கம்பங்கள் அபகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.26

புங்குடுதீவுப் பிரதேசத்தில் வீதியோரமாகப் போடப்பட்டிருந்த மரமின்கம்பங்கள் சில திருடப்பட்டுள்ளன.

புங்குடுதீவுப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக இலங்கை மின்சாரசபையினால் பல வருடங்களுக்கு முன்னர் நடப்பட்டிருந்த மரமின்கம்பங்கள் அண்மையில் கழற்றப்பட்டு அப்பிரதேசத்தில் வீதியோரமாகப் போடப்பட்டிருந்தன. இவ்வாறு போடப்பட்டிருந்த மின்கம்பங்களில் சில கடந்த 22ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் வாளால் அறுத்து துண்டுகளாக்கி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 10 - 04 - 1925 |  | 27 - 03 - 2004 |

### அமரர் வைரவி சின்னத்தம்பி

மாதம் ஒன்றான போதும் மாறவில்லை எம் துயரம்
நீண்டதூரம் நீங்கள் சென்ற காரணந்தான் எதுவோ?
ஆண்டவனின் அடிபற்றி எமைவிட்டுச் சென்றதேனோ?
அப்பா! அகிலமதில் உங்களைக் காண்பது தான் எப்போ?

எங்கள் அன்புத் தந்தையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன், இன்று (26.04.2004) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மற்றும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"செந்தூர்",
மலைவேம்படி, அளவெட்டி. T.P.0602213009.
(31321)(34-26-14-16)

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் வருட இதய அஞ்சலி

| மலராய் அன்னை மடியில் | | விதையாய் பூமி மடியில் |
|---|---|---|
| 26 - 04 - 1938 |  | 26 - 04 - 2003 |

இல.826/11, கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

### அமரர் கனகசபை அரசரத்தினம்

(பத்திரிகையாளர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

திதி: 14.05.2004 (தசமி)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மிதயம்
திரண்டு வரும் கண்ணீரால் அஞ்சலி செய்து
உங்கள் நினைவுடனேயே மண்ணுலகில் வாழ்ந்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

59,Malyons Road,
London SE 13 7XD,
U.K.
(31291) (26-14-16)

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| வையத்துள் அறிமுகம் | | தெய்வத்துள் சங்கமம் |
|---|---|---|
| 20 - 08 - 1932 |  | 27 - 03 - 2004 |

### திருமதி கந்தையா சிவபாக்கியம்

அன்பிற்கு இலக்கணமாம் எங்கள் அம்மா
ஆறுதலின் சிகரமாம் எங்கள் அம்மம்மா
பண்பின் இருப்பிடமாம் எங்கள் மாமி
பாரினில் எமைக்காத்த எங்கள் தெய்வம்
இனி எங்கே காண்போம் உங்களை - நாம்?
இங்கே ஏங்கித் தவிக்கின்றோம் நீங்களின்றி
எங்கும் நிறைந்திருக்கும் இறைவனடி - குளிர்ந்திருக்க
இங்கு நாம் இறைஞ்சுகின்றோம் - இறைவனையே!

இன்று (26-04-2004) திங்கட்கிழமை இணுவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

'கஜமுகா கருணை',
பாற்சங்க லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.
(31297) (26-14-16)

- குடும்பத்தினர்.

## இடைநிறுத்தப்பட்டிருந்த மாணவர்கள் விரிவுரைகளைத் தொடர அனுமதி

கொழும்பு,ஏப்.26

பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் செயற்பட்டவர்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டு இடைநிறுத்தப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீட மாணவர்கள் மன்னிப்புக் கோரியதையடுத்து அவர்களை மீண்டும் பல்கலைக்கழகத்தில் இணைத்துக்கொள்வதென நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் 17 மாணவர்கள் 2003 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து இரண்டு வருடங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தனர். இம் மாணவர்கள் சார்பில் பொறியியற்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அசங்க பாலகுமபர மன்னிப்புக்கோரியதையடுத்து அம்மாணவர்களை இணைத்துக்கொள்வது பற்றி பல்கலைக்கழக நிர்வாகம் பரிசலிக்கும் என்று துணைவேந்தர் பேராசிரியர் கபில - குணசேகர கருத்து வெளியிட்டிருந்தார்.

இடைநிறுத்தப்பட்டிருந்த மாணவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளும்படிகோரி ஏனைய மாணவர்கள் 38 நாள்கள் தம் விரிவுரைகளைப் பகிஷ்கரித்திருந்தனர். இது குறித்துத துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட எண்மரைக் கொண்ட ஆலோசனைக் குழுவுடன இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்பு பகிஷ்கரிப்புக் கைவிடப்பட்டது.

இணக்கப்பாட்டையடுத்து இடைவிலக்கப்பட்ட 17 மாணவர்களும் பலகலைக்கழகத்தில் சேர்த்துக்கொள்ளபடவுள்ளனரெனத் தெரிவித்த துணைவேந்தர், மாணவர்கள் கல்வி, விளையாட்டுத் துறைகளில் தமது திறன்களை வளர்த்துக் கொள்ளவேண்டும் எனவும மனக்குறைகள் கலந்துரையாடல்கள் மூலம் தீர்க்கப்படவேண்டும் எனவும், கல்வியறிவுள்ள மாணவர்கள் இத்தகைய அறிவீனமான செயல்களில் ஈடுபடக்கூடாதெனவும், தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 571 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 23-04-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 5622254-5634491 |

வெற்றி இலக்கங்கள்
05 25 38 41

லக்கினம் சிங்கம்

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது.
இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 2,70,195 | 10 | 27,01,950 |
| 2.இலக்கங்கள் | 24,857 | 20 | 4,97,140 |
| 1.இல + லக்கினம் | 24,647 | 30 | 7,39,410 |
| 2.இல + லக்கினம் | 2,246 | 100 | 2,24,600 |
| 3.இலக்கங்கள் | 653 | 500 | 3,26,500 |
| 3.இல + லக்கினம் | 65 | 5,000 | 3,25,000 |
| 4.இலக்கங்கள் | 02 | 1,00,000 | 2,00,000 |
| 4.இல + லக்கினம் | 01 | 10,00,000 | 10,00,000 |
| மொத்தம் | 3,22,666 | - | 60,14,600 |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 60,14,600

தொடர் இல. 4655864 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஏப்ரல் 27ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5631866-4-14
5622625-7-49
5624073-4-08
5626001-8-21
5626709-5-16


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 22 - 11 - 1935 |  | 26 - 04 - 2002 |

### திருமதி கனகரத்தினம் புஸ்பராணி

வானத்து நிலவைக் காட்டி - எம்
பசிதீர்த்த எம் உறவே - தாய்மையின்
சிறப்புதனை தரணியில் காத்தவளே
வாய்மையே உள்ளமதாய் மண்மீது நடந்தவளே
பாரினில் உன் முகத்தை - இனி
பார்த்திடல் என்று அம்மா
மீண்டுமொரு பிறப்பு உண்டேல் - எம்
உறவினில் கலந்திடம்மா

புலோலி தெற்கு,
புலோலி

- குடும்பத்தினர்.

# டாக்டர்கள் பட்டப்பின் படிப்பை தொடர்வதற்கு வயதெல்லை?

## அரச வைத்தியர்கள் சங்கம் கடும்எதிர்ப்பு

கொழும்பு,ஏப்.26

அரச வைத்தியர்கள் பட்டப்பின் படிப்பு நெறிகளைத் தொடர்வதற்கென வயதெல்லையொன்றை நிர்ணயிப்பதற்கு மருத்துவத்துறை பட்டப்பின் படிப்புகள் கல்லூரி முடிவுசெய்திருப்பதை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடுமையாக எதிர்த்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த டாக்டர் சென்னா பெரேரா தெரிவித்ததாவது:-

பட்டபின் படிப்பைத் தொடர்வதற்கு மருத்துவர் ஒருவர் 35 வயதுக்கு குறைவானவராக இருக்கவேண்டும். ஆனால், மருத்துவக் கல்லூரியிலிருந்து ஒருவர் மருத்துவராகப் பட்டம்பெற்று வெளியேறும்போது எப்படியும் 30 வயதாகிவிடுகின்றது. இதன்பின்னர் 80வீதமான புதிய மருத்துவர்கள் ஏறத்தாழ 5ஆண்டுகள் தூர இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளில் சேவையாற்ற வேண்டியுள்ளது. பெரும்பாலும் 5வீதமானவர்கள் தான் கொழும்பில் அல்லது அதற்கு அருகில் சேவையாற்ற வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆனால், பட்டப்பின் படிப்புக் கல்லூரியில் சேர்வதற்கும் வசதி கிடைக்கின்றது.

பாடநெறிகளுக்கும் பரீட்சைகளுக்குமான கட்டணங்கள் பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளதால் சில வைத்தியர்களால் அதனைச் சமாளிக்க முடியாதிருக்கும் நிலை ஒரு புறமிருக்க, இப்பொழுது வயது பற்றிய பிரச்சினை வேறு - என்றார் அவர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: சில வசதியடைந்த சமூகத்தினர் தமது பிள்ளைகளுக்கு வெளிநாடுகளில் கல்வி பயிற்றுவிக்கிறார்கள். இந்தப் பட்டதாரிகள் நாடு திரும்பி 16ஆவது சட்ட விதிகளை நிவர்த்தி செய்வார்களானால் பட்டப்பின் படிப்பைத தொடரமுடிகிறது. எனவே, இப்படியானவர்களுக்கு வசதிசெய்து கொடுப்பதற்காகவே இந்தப் புதிய நடவடிக்கை என நாம் கருதுகின்றோம் - என்றார்.

இந்தப் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மருத்துவ பட்டப்பின் படிப்புகள் நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் லலிதா மென்டிஸை விரைவில் சந்திக்கவிருக்கின்றது.

இந்த விடயம் பற்றி மருத்துவத்துறை பட்டப்பின் படிப்புகள் கல்லூரி ஒரு முடிவை எடுத்துள்ளது. இதை ஒரு பெரிய பிரச்சினையாக்க வேண்டியதில்லை. அவசியமானால் இந்தத் தீர்மானம் திருத்தப்படலாம் - என்று பேராசிரியர் லலிதா மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

(ப)

# வவுனியாவில் மே தினத்துக்கு பிரமாண்டமான ஏற்பாடுகள்

கொழும்பு,ஏப்.26

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் வவுனியாவிலுள்ள தொழிற்சங்கங்கள் என்பன இணைந்து மே தின விழாவை இம்முறை வவுனியா நகரசபை மைதானத்தில் பிரமாண்டமான முறையில் எழுச்சியுடன் கொண்டாட ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான முடிவு நேற்றுமுன்தினம் மாலை வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது என்று தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலளர் எஸ்.என்.ஜி.நாதன் தெரிவித்தார்.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரி தமிழ்த் தேசியத்தின் கோட்பாட்டின் அடிப்படையில் மே தின விழாவைக் கொண்டாட வேண்டுமென்று கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஆலோசனைகளைத் தெரிவித்தனர்.

மாலை 4 மணிக்கு மே தினப் பேரணிகள் யாழ். வீதி, கண்டி வீதி, வழியாகப் புறப்படும். பேரணி வன்னி மாவட்டத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் ஆரம்பித்து மைதானத்தை வந்தடைந்தவுடன் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும். பேரணிகள் ஆரம்பிக்கும் இடங்களில் அலங்கார வளைவுகள் நிர்மாணிக்கவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. (ஐ-ரி)

# சபாநாயகர் பதவிக்காக லஞ்சம் வழங்கவும் முன்வந்தார்கள்

## ஹெல உறுமயவின் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,ஏப்.26

சபாநாயகர் பதவிப் போட்டியில் வெற்றிபெற உதவும்படி கோரி லஞ்சம் வழங்கவும் சிலர் முன்வந்தார்கள் என்று ஜாதிக ஹெல உறுமய பிக்கு எம்.பி. ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயகர் தேர்வின்போது தமது தரப்பு வேட்பாளரை வெற்றிபெறச் செய்ய உதவும்படி கோரி லஞ்சம் வழங்க முன்வந்தவர்களில் அரச தரப்பு உறுப்பினர்கள் முன்னணி வகித்ததாக ஜாதிக ஹெலஉறுமய உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அரச தரப்பிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவருக்கு ஒருகோடி ரூபாய் தரப்படும் என்று எழுதப்பட்ட கடதாசித்துண்டு ஒன்று அனுப்பப்பட்டதைத் தாம் கண்டதாக ஹெல உறுமய தலைவர் எல்லாவெல மெத்தாநந்த தேரர் தெரிவித்தார்.

அவர்கள் எங்கள் பின்னாலும் வந்து என்னென்னவோவெல்லாம் தருவதாகக் கூறிக்கொண்டிருந்தார்கள் என்றார் மெதாநந்த தேரர்.

அவர் மேலும் கூறுகையில்:- அரச தரப்பு வேட்பாளர் தோற்றவுடன் அவர்கள் பிக்குகளை நோக்கி கடதாசிச் சுருள்களையும் கோப்புக்களையும் எறிந்ததுமட்டுமன்றி தகாத வார்த்தைகளாலும் பேசினார்கள் என்றார். ஓமல்பே சோபித்ததேரர் கூறுகையில் "நாடாளுமன்றம் சாக்கடையாக" மாறிவிட்டது என்றார்.

தொங்கு நாடாளுமன்றத்தின் அதிகார சமநிலையைப் பேணும் சக்தியாக விளங்கும்.

ஹெலஉறுய பிக்குகள் இலங்கை நாடாளுமன்றச் சரித்திரத்தில் முதன் முதல் கம்யூனிஸ்ட் சபாநாயகர் ஒருவர் தெரிவுசெய்யப்படவிருந்த சர்ந்தர்ப்பத்தை இல்லாமல் செய்திருக்கிறார்கள். (ப)

## அரியாலையில் விளையாட்டுப் போட்டிகள்

அரியாலை ஏப்.26

அரியாலை சனசமூக நிலையம் அதன் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாவட்ட, உள்ளூர் மட்டத்தில் விளையாட்டுச் சுற்றுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

எறிபந்தாட்டம், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் போன்ற போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், திணைக்களங்கள் மேற்படி நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## ஆணையாளராக நியமனம்

அரியாலை,ஏப்.26

யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளராக எஸ்.ஐயாத்துரை பதவி ஏற்றுள்ளார்.

முன்னர் இந்தப் பதவியை வகித்த சு.கணேசமூர்த்தி ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். (17)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

அரியாலை,ஏப்.26

வலி. கிழக்குப் பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்கள் இன்று திங்கட்கிழமை நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன என்று வலி. கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் க.வெங்கடாசலம் அறிவித்துள்ளார். (117)

## துரோகம் இழைத்த ஐ.தே.கட்சியின் எம்.பி. யார்?

கொழும்பு,ஏப்.26

சபாநாயகர் தேர்தலின்போது கட்சிக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டவர் யார் என்பதைக் கண்டறிய ஐக்கிய தேசியக் கட்சி ஆய்வு நடத்தும் என்று முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூறியிருக்கிறார்.

அரசியல் கட்சிகள் எல்லாவற்றிலுமே துரோகிகள் இருக்கின்றார்கள். எமது கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட வேட்பாளர் முதல் தடவையே நல்ல பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுபார். ஒருவர் துரோகம் இழைக்காமல் இருந்திருந்தால், ஆனால் விரைவில் அவ்வாறு செய்தவர் யார் என்பதைக் கண்டுபிடிப்போம் என்று கூறினார் அமரதுங்க.

இந்த அரசு நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்காது என்றும் அமரதுங்க குறிப்பிட்டார். (ப)

## நெடுந்தீவுக்கு அரச அதிபர், அதிகாரிகள்.



யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் யாழ். செயலக அதிகாரிகளும் நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்கு விஜயம் செய்தனர். அங்கு அவர்கள் சீக்கிரியாம்பள்ளம் வெட்டுக்கரிக்குளப் புனரமைப்புத் தொடர்பாக நேரில பார்வையிட்டனர். சாராப்பிட்டியில் உள்ள நல்லதண்ணீர் குளத்துக் கும் சென்றனர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அரச அதிபர் உரையாற்றுவதையும் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் விரைவில் நவீனமயமாகும்

## 'நிகொட்' அமைப்பின் நிதி உதவியுடன்

அரியாலை,ஏப்.26

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகள் விரைவில் நவீன மயமாக்கப்படவுள்ளன.

இதற்கென 'நிகொட்' நிறுவனம் ஆசிய அபிவிருத்தி வங்கித் திட்டத்தின் கீழ் கிராமிய வங்கிகளின் செயற்பாடுகளுக்குப் பல்வேறு வகையான நிதி உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டங்களில் சுமார் 30 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் இந்த உதவியினால் தமது திட்டங்களை முன்னெடுப்பதோடு, வங்கிகளின் செயற்பர்டுகளை நவீன மயமாக்குவதற்கும் வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுமார் 97 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் செயற்பட்டு வருகின்றன. 'நிகொட்' அமைப்பின் இந்த நிதி உதவியினால் வங்கிகளின் செயற்பாடுகள் மேலும் அபிவிருத்தி அடையும் என்றும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (ஐ-17)

# யாழ். வலயத்தில் புதிய அதிபர்களை நியமிக்க இன்று நேர்முகப் பரீட்சை

மண்டைதீவு,ஏப்.26

யாழ். கல்வி வலயத்தில் அதிபர் பதவிக்கு வெற்றிடமாக உள்ள பாடசாலைகளுக்குப் புதிய அதிபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப்பரீட்சை இன்று திங்கட்கிழமை நடைபெற இருப்பதாக யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். இந்த வலயத்தில் உள்ள பதினாறு பாடசாலைகளுக்குப் புதிய அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

பெரும்பாலான அதிபர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதன் காரணமாக ஏற்பட்ட இந்த வெற்றிடங்கள் புதியவர்களால் நிரப்பப்படவுள்ளன. நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் விணப்பதாரிகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

யாழ் கல்வி வலயத்தைத் தவிர்ந்த ஏனைய வலயங்களில் இருந்து விண்ணப்பித்தவர்கள் தமது தகுதிச் சான்றிதழ்களுடன் "நியமனங் கிடைக்குமிடத்து விடுவிக்கப்படுவார்" என்ற உறுதிக்கடிதத்தைச் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்று நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் பதவி நிரப்பப்பட இருக்கும் பாடசாலைகளுள் யாழ். நகரத்தை அண்டிய பிரபல பாடசாலைகளும் அடங்குகின்றன.

(ஐ-88)

# நாவற்குழியில் படையினரின் விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி,ஏப்.26

புத்தாண்டையொட்டி நாவற்குழி 4ஆவது இலகு காலாற்படைப் பிரிவைச் (4. எஸ்.எல்.எல்.ஐ) சேர்ந்த படையினர் தரப்பில் விளையாட்டுப் போட்டிகள் கடந்தவாரம் நடத்தப்பட்டன. இந்த விளையாட்டு நிகழ்வுகள் நாவற்குழி படைமுகாம் அதிகாரி மேஜர் ஜெயவர்த்தனா தலைமையில் நாவற்குழி மாதா கோவிலுக்கு அருகிலுள்ள மைதானத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச தெற்குப் பிரிவைச் சேர்ந்த நுணாவில், கைதடி நாவற்குழி பகுதிமுகாம்களைச் சேர்ந்த படையினர் கலந்துகொண்டனர்.

கிரிக்கற், 100 மீற்றர் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் உட்படப் பல தடகள விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-31)

# மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக இருப்பதால் எந்தப் பயனும் இல்லை

## 'வணிகஜோதி' மலர் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.26

பாடசாலைகளில் மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக வளர்க்கப்படக் கூடாது. புறப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபடவேண்டும்.

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் மா சின்னத்தம்பி தெரிவித்தார்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வணிக மாணவர் மன்ற வெளியீடான 'வணிகஜோதி' நூல் வெளியீட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பாடசாலைகளில் மலர்கள் வெளியிடுவதை நான் சம்பிரதாயமாகக் கருதுவதில்லை. அதனை ஒரு முக்கிய பணியாகவே நோக்குகின்றேன்.

பாடசாலைகளில் இன்று பாடம் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் பிற பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. முக்கியமாக இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர் சமூகம் ஈடுபடுவதில்லை. புத்தகப் பூச்சிகளாக மாணவர் சமூகம் வளர்க்கப்படக் கூடாது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகப் பாடசாலைகள் சமூக அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றுகின்றன. நல்ல மாணவர்களை உருவாக்கும் பணியில் பாடசாலைகள் ஈடுபடும் போது சமூக அபிவிருத்தி கல்வி ரீதியாக வளர்க்கப்படும்.

மாணவர்கள் தங்கள் ஆக்கங்களை எழுத, வாசிக்க மகிழ்ச்சியடைய, நம்பிக்கொள்வதற்கு எனப் பல காரணங்களுக்காகச் சஞ்சிகைகள் முக்கிய பங்காற்றுகின்றன - என்று அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வெளியீட்டு உரையாற்றிய யாழ். வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் சறோஜினி வேதநாயகம் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட கல்வி ஒழுங்குகளுக்கு அப்பால் நூல் வெளியீடு ஒன்றினை இப்பாடசாலை சமூகம் மேற்கொள்ளுவது பாராட்டுக்குரியது - எனத் தெரிவித்தார்.

நூல் அறிமுகவுரையாற்றிய யாழ். பல்கலைக்கழகப் பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் ந.பேரின்பநாதன் தெரிவித்ததாவது:-

வணிகக்கல்வி பயிலும் மாணவர்கள் ஆங்கிலம் நன்கு கற்கவேண்டும். அப்போதுதான் பல்கலைக்கழகம் போன்ற உயர்கல்வி நிலையங்களில் வணிகக் கல்வியைத் தொடர முடியும். இன்று வணிகக்கல்வி உலகில் முதன்மை பெற்ற கல்வியாக திகழ்கிறது. வணிகக் கல்வி அறிவாளிகளை விலைகொடுத்து வாங்குவதற்கு மேற்கு நாடுகள் போட்டி போடுகின்றன - என்று தெரிவித்தார்.

வணிக மாணவர் ஒன்றியத் தலைவர் க.மதுசாந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையினை ஆசிரியை திருமதி பா.கனரத்தினம் நிகழ்த்தினார். தொடக்க உரையினைப் பாடசாலை அதிபர் வ.மாணிக்கம் நிகழ்த்தினார். தொடர்ந்து முதன்மை விருந்தினர் உரை இடம்பெற்றது. (ஐ-12)

### கோப்பாயில் பவுஸர்- லொறி மோதி விபத்து

கோப்பாய்,ஏப்.26

நேற்றுக்காலை கோப்பாய்ச் சந்தியில் எண்ணெய் பவுஸரும் லொறியும் மோதியதில் எண்ணெய் பவுஸரின் முற்பகுதி பலத்த சேதமடைந்தது.

கொழும்பிலிருந்து எண்ணெய் நிரப்பிவந்த பவுஸர் காங்கேசன்துறை நோக்கிச் செல்கையில் பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ச் சந்தியில் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது

இதன்போது பவுஸரின் எண்ணெய்த் தாங்கிக்கோ வேறு எவருக்குமோ சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இவ்விபத்தின் காரணமாக வீதியில் நீண்டநேரம் பவுஸர் நிறுத்தப்பட்டிருந்தமையால் பலமணிநேரம் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டிருந்தது. (ஐ-72)

# 'உயிர் நுட்பு' நிறுவனத்தின் புதிய வளாகத் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.26

உயிர்நுட்பு நிறுவனத்தின் (Bio Tec International Ltd.) புதிய வளாகத் திறப்புவிழா நாளை செவ்வாய்க் கிழமை காலையில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி, பலாலி வீதியில் அமைந்துள்ள இந்த வளாகத்தினை சுவீடன் நாட்டின் உப்சலா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூன்று அறிஞர்கள் திறந்துவைக்கவுள்ளனர்.

பேராசிரியர் . மாலின் ஒக்கர்புளொம், பேராசிரியர் ரூனே லிமிங்கா, திருமதி இன்கா பிறித் லிமின்கா ஆகிய மூவரும் உயிர்நுட்பு வளாகத் திறப்புவிழாவுக்கென்றே சுவீடனில் இருந்து வருகிறார்கள்.

இத்திறப்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு உள்ளூர் அறிஞர்கள, கல்விமான்கள், தொழில் அதிபர்கள், நலன்விரும்பிகள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மேல்மாகாண ஜே.வி.பி.உறுப்பினரை கைது செய்ய நீதிமன்று உத்தரவு

கொழும்பு,ஏப்.26

மேல் மாகாண ஜே.வி.பி. உறுப்பினர் எராஜ் கிரிஷாந்த டி அல்விஸ் என்பவரைக் கைது செய்யும்படி வத்தளை நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமாகிய திருமதி ஏ.டி.விஜயவர்த்தன பொலீஸாருக்குக் கட்டளை பிறப்பித்துள்ளார்.

நீதிமன்றில் ஆஜராகுமாறு பல தடவைகள் விடுவிக்கப்பட்ட கட்டளைகளை இவர் உதாசீனம் செய்து வருவதினாலேயே கைது செய்யும்படியான கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அண்மையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது கந்தானைப் பொலீஸ நிலையத்திற்குச் சென்ற அல்விஸ் ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கையென்ற பெயரில் பொய்யான ஆவணம் ஒன்று அச்சகமொன்றில் அச்சடிக்கப்படுவதாகவும் அங்கு நள்ளிரவில் சென்று திடீர் சோதனை நடத்தும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார். இதனை எழுத்தில் தரும்படி பொலீஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் அவ்வாறு செய்யமறுத்து பொலீஸ் நிலையத்தை விட்டுச் சென்றுள்ளார்.

பொலீஸார் இது குறித்துச் சோதனை நடத்துவதற்கு கட்டளை பிறப்பிக்கும்படியும் நீதிவானிடம் கேட்டுக்கொண்டதை அடுத்து மாகாண சபை உறுப்பினருக்கு அறிவித்தல் அனுப்பும்படி நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். இதற்கு மாகாணசபை உறுப்பினரிடமிருந்து

எதுவிதபதிலும் வராததையடுத்து அவரைக் கைது செய்யும்படி நீதிவான உத்தரவிட்டார். (ப)

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நீராவி இயந்திரவியல் பயிற்சி

கொழும்பு,ஏப்.26

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் இந்தியாவின் தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து நீராவி இயந்திரவியல் பயிற்சி நெறியொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 1993 இல் பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்தில் சித்திரக்கலை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது அமைக்கப்பட்டுள்ள நீராவி இயந்திரப் பயிற்சிப் பிரிவுக்கான சகல பொருள்களையும் இந்திய நிறுவனம் ஒன்று வழங்கவுள்ளது. இதன்மூலம் பொறியியல் துறை சார்ந்த ஆய்வு கூடங்கள் மற்றும் பயிற்சி வரைவுகள் ஆகியனவும் இந்த நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும்.

இதற்கான ஒப்பந்தத்தைப் பேராதனைப் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கபில குணசேகர மற்றும் இந்தியாவின் போபஸ் மார்சல் நிறுவன சர்வதேச செயற்பாட்டுக்கான பொது முகாமையாளர் சுனில் பதாமி ஆகியோர் நாளை 27 ஆம் திகதி கண்டியில் வைத்துக் கைச்சாத்திடவுள்ளனர். (ஐ-ரி)

## அனுதாப அஞ்சலி



அமரர் **விசுவநாதர் கனகசபாபதி**

(தலைவர். கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானம்)

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட வி. கனகசபாபதி அவர்கள் தம் தந்தை விசுவநாதரின் இறப்பின் பின் எமது தேவஸ்தானத்தில் 2002 ஆம் ஆண்டுவரை தலைவராக இருந்து குறித்த காலத்தில் தமது சுகவீனம் காரணமாகத் தமது பணியைத் தொடர்ந்து செய்யமுடியாமையினால் விலகி நின்றுள்ளார். இவரின் சேவை எமது தேவஸ்தானத்துக்கு மிகவும் அளப்பரியதாகும். அவருடைய அமரத்துவச்செய்தியறிந்து அதிர்ச்சியும் மிகுந்த துயரமும் அடைகிறோம்.

அன்னாரின் பிரிவால் அல்லலுறும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா சாந்திபெற்று மேல்நிலையடைய கைதடி கயற்றசிட்டி கந்தவேல் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி வடக்கு,
கைதடி. (31324)(34-24-11-17) - ஆலய பரிபாலன சபை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 16 - 02 - 1921



மறைவு 27 - 03 - 2004

## அமரர் தவசிப்பிள்ளை சின்னத்துரை

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

**தவசிப்பிள்ளை சின்னத்துரை**

(ஓய்வுபெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம்)

அவர்கள் 27.03.2004 அன்று காலமானார். அவரது அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (26.04.2004) திங்கட்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதலும் தேறுதலும் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபந் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பிரிவால் வருந்தி நிற்கும்:
மகன்மார்: ஸ்ரீஸ்கந்தராஜா (ஜேர்மனி), வரதராஜா (லண்டன்).
மகள்: நிர்மலாதேவி இரத்தினசிகாமணி பாலசிங்கம் (கனடா)
மருமக்கள்: இரத்தினசிகாமணி (லண்டன்), பரமேஸ்வரி (இந்தியா) இரத்தினேஸ்வரி(லண்டன்)
பேரப்பிள்ளைகள்: அசோக், கேதீஸ், சேகர், தீப்ன், சௌமியா, நித்தியா (திவ்யா),வஜீதன், ஜீவதா.

தகவல்:
திருமதி க.பாலசிங்கம்
*(விக்கி சைக்கிள் கடை முன்பாக)*
சுதுமலை மேற்கு,
அம்மன் கோயிலடி,
மானிப்பாய். (31326)(34-11-17-24)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மீனலோசனா சிவசங்கரன்

திருமதி மீனலோசனா சிவசங்கரன் அவர்கள் நேற்று (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை புதுடில்லியில் காலமானார்.

அன்னார் சிவசங்கரன் அவர்களின் அன்பு மனைவியும் அகிலன் அவர்களின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (முன்னாள் அதிபர், பரமேஸ்வராக் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி), திருமதி சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற டாக்டர் குருசாமி, திருமதி குருசாமி ஆகியோரின் அன்பு மருமகளும் சிவச்செல்வி, குகஜோதி, சச்சிதானந்தசிவம், யோகானந்தசிவம், பயங்கயச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.04.2004) ஞாயிற்றுக் கிழமை நியூடெல்கியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-34658) (24-11-17)

தகவல்:
சி.யோகானந்தசிவம்.

### செல்லத்தம்பி தர்மலிங்கம்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் நூறம்போர்க் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் செல்லத்தம்பி - கதிராசி ஆகியோரின் அன்பு மகனும் இராசரத்தினம் - மகேஸ்வரி ஆகியோரின் அருமை மருமகனும் சௌந்தலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் வர்ணன், பிருந்தா, விதுஷா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தங்கம், நாகம்மா, செல்வராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சற்குணதேவி, சிறிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தவம் (சுழிபுரம்) அவர்களின் சகலனும் ரூபகாந்தன், ரஜீவ்காந்தன், நித்தியா, தர்சிகா, சிந்துஜா, சரணிகா, அஜி ஆகியோரின் சித்தப்பாவும் வேணுகா, கோபிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜேர்மனியில் வசிக்கும் தவநேசன் அவர்களின் மைத்துனரும் மதி அவர்களின் மாமனாரும் துரைராஜா அவர்களின் அன்பு மாமனாரும் நடேசபிள்ளை அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரனும சின்னமணி அவர்களின் அன்பு மைத்துனரும் சண்முகராஜா அவர்களின் மாமனாரும் ராணி அவர்களின் அன்பு மைத்துனரும் விக்கினேஸ்வரன் (ஜெயா) அவர்களின் அங்கிளும் கொட்டடியில் வசிக்கும் ரஞ்சினி, சவுதியில் வசிக்கும் ரஞ்சிதம் , கௌரிநாயகி, சாரதா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*79, பத்திரகாளி கோயிலடி,*
*வண்ணார்பண்ணை.*
*ஜேர்மனி தொ.பே.இல.:004991 1269903.*

தகவல்:
இ. சிறிதரன்
வேணுகா கொமினிக்கேஷன்
(நாச்சிமார் கோயிலடி).
தொ. பே. இல.: 222 2541

(சி-34659) (34-11-17-24)

# கருணாவின் துரோகத்தனமும் புலம்பெயர்ந்தோரின் எழுச்சியும்

**ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் 'தமிழ்க்குரல்' வானொலி நிகழ்ச்சியில் 19.04.2004 அன்று ஒலிபரப்பாகிய ஆய்வுக் கருத்து இது.**



இருளத் தொடங்கிவிட்டது என்று சொன்னார்கள். இடிமுழக்கம் கேட்கப்போகின்றது என்று எச்சரிக்கையும் செய்தார்கள்! மின்னலைக் காணப்போகின்றீர்கள் என்று காலநிலை விளக்கமும் கொடுத்தார்கள்! முடிந்தது தமிழீழ விடுதலைப் போராட்டம் என்று எக்காளம் இட்டார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழ்த் தேசிய எழுச்சிக்கும் எதிரான விரோதிகளும் துரோகிகளும் சுமார் ஒருமாத காலம் போட்ட கூச்சல்களுக்கும் கூத்துக்களுக்கும் அளவு கடந்த சோகத்தை உள் வாங்கியவர்களில் பெரும்பான்மையானோர் புலம்பெயர்ந்த தமிழீழத்து மக்களே யாவார்!

ஆனால் நடந்தது என்ன?

இருளவும் இல்லை; இடிமுழக்கம் கேட்கவும் இல்லை; மின்னலோ மின்னவும் இல்லை மாணாகப் பதறிப் போன தமிழ் உறவுகள் பார்த்துப் பரவசப்படும்படியாக சூரியத் தேவனின் சுடரொளிக் கதிர்கள் சுடர் விட்டுப் பிரகாசித்து எழுந்தன. கண்மூடித திறக்குமுன்பே கயவரின் கதை முடிந்தது. தமிழ்த் தேசியத்திற்கு எதிராக எழுந்த தற்காலிக நெருக்கடி இரத்தக் களறியின்றி விரைவாகவும் விவேகமாகவும் தேசியத் தலைவரினால் தீர்த்துவைக்கப்பட்டது. நல்லிதயம் கொண்ட நாட்டுப் பற்றாளர்கள நிம்மதிப் பெருமூச்சு விட்டுப் பூரித்தார்கள். தமிழீழத் தேசியத் தலைவரின் பரிமாணத்தின் இன்னுமொரு பக்கத்தையும் பார்க்கக் கூடிய வாய்ப்பு உலகிற்குக்கிடைத்தது.

கருணா விவகாரத்தைப் பூதாகரமாகப் பெரிதுபடுத்துவதில் சிங்கள, இனவாத ஊடகங்களும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான தமிழ்த் துரோக ஊடகங்களும் தமிழர் நலனுக்கு எதிரான சில சர்வதேச ஊடகங்களும் முக்கிய பங்கினை வகித்தன. தமிழ்த் தேசியவாதம் உடைந்தது என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இரண்டாகப் பிளவுற்றது என்றும் தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக இனிமேல் விடுதலைப் புலிகள் விளங்கமுடியாது என்றும் கருணாவைத் தோற்கடிக்க முடியாது என்றும் பெரிய இரத்தக் களறி ஏற்படப் போகின்றது என்றும் இந்தத் தமிழ் விரோத, துரோக ஊடகங்கள் தமது விசமப் பிரசாரங்களை வலுவாக மேற்கொண்டுவந்தன.

### வல்லுநர்களின் வாய்ச்சவாடல்

கருணாவின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் எந்த விதமான நடவடிக்கைகளை எடுக்கக் கூடும் என்றும் அத்தகைய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் எடுத்தால் எத்தகைய பாரதூரமான விளைவுகள் புலிகள் இயக்கம் சந்திக்க நேரிடும் - என்றும் இந்த ஊடகங்கள் எச்சரிக்கத் தவறவில்லை. அரசியல் ஆய்வாளர்கள் என்றும் இராணுவப் புலனாய்வு ஆய்வாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்ற இக்பால அத்தாஸ், டி.பி.எஸ்.ஜெயராஜ், பந்துல ஜெயசேகர, இவ்ஸ்லி டி சில்வா மற்றும் இந்து பத்திரிகையின் ராம், நிருபம் சுப்பிரமணியன், டி.எஸ்.சம்பந்தன் போன்றவர்களும் இளைப்பாறிய இந்திய இராணுவ உயர் அதிகாரிகளான மேஜர் ஜெனரல் அசோக மேத்தயா, கேணல் ஹரிகரன் போன்றவர்களும் இந்த ஊடகங்கள் மூலம் செய்த பயமுறுத்தல்களும் எல்லை கடந்தே போயின.

இதற்கிடையில் சென்னை நகரில மார்ச் மாதம் 25ஆம் திகதியன்று அவசர அவசரமாக ஒரு நாள் ஆராய்ச்சி மகாநாடு ஒன்று ஒழுங்கு செய்யப் பட்டது. அதனை ஒழுங்கு செய்தது **'Observer Research Foundation'** - என்ற அமைப்பாகும். அந்த ஒருநாள் ஆராய்ச்சி மாநாட்டின் தலைப்பு **'LTTE Split and Implication'** என்பதாகும். கருணா ஏற்படுத்திய பிளவு சிறிலாங்காவின் ஜனநாயகத்திற்கு(!) நன்மை தருவதோடு சமாதானப் பேச்சுக்களுக்கும் நன்மை தருவாதாகவும் அமையும் என்று அன்றைய தினம் கருத்துக்கள் வெளியிடப பட்டதாக எமது மதிப்புக்குரியவரும் தமிழ்த்தேசியப் பற்றாளருமான திரு. சச்சி சிறிகந்தா அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசயத்திற்கு எதிரான விசமத்தனமான கருத்துக்களையும் பிரச்சாரங்களையும் இப்படிப்பட்ட ஊடகங்களும் அரச அமைப்புக்களும் வெளியிட்டுக் கொண்டிருக்கையில் தமிழீழத் தேசிய தலைமையின் நடவடிக்கை எதுவாக இருக்கப் போகின்றது என்ற எதிர்பார்ப்பில் தமிழ் நெஞ்சங்கள் தத்தளித்துக் கொண்டிருந்தன. கருணாவிற்கு எதிராக ஒரு நடவடிக்கையையும் எளிதில் செய்துவிட முடியாது என்று தமிழ் விரோத துரோக சக்திகள் உற்சாகமாக ஊளையிட்டு பேசியும் எழுதியும் வந்து கொணடிருந்த வேளையில்த்தான் தேசியத் தலைவர் தனது செயற்பாட்டினை மிகவும் அநயாசமாகச் செய்து முடித்தார. இத் தமிழ் விரோத, துரோக சக்திகளின் செயற்பாடுகள் யாவும் அநாவசியமாகின.

### ஆனையிறவு தந்த பாடம்

'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கையின் போது ஆனையிறவு இராணுவத் தளத்தை விடுதலைப் புலிகள் எவ்வாறு கைப்பற்றக் கூடும் என்று எத்தனையோ வழிமுறைகளை பல இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டு எழுதியிருந்தார்கள். ஆனால், அவர்களில் எவரும் குறிப்பிட்டிராத வழியில்தான் ஆனையிறவுத் தளத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தேசியத் தலைவரின் வழி நடத்தலின் பிரகாரம் கைப்பற்றினார்கள். அதன் பின்னர் அப்போர் முறையை ஆய்வு செய்வதில் தான் இந்த வல்லுநர்கள தமது நேரத்தைச் செலவிட்டார்கள். இப்போது மீண்டும் ஓர் இராணுவ ஆய்வில் இவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிய நேரம் வந்திருக்கின்றது.

ஆயினும் கருணா என்கின்ற ஒரு தனிமனிதன் தனது சொந்த இச்சைகளுக்காகவும் சுயநலத்திற்காகவும் செய்திட்ட துரோகத்தனமான விடயங்களை இப்போது வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளதை நாம் காணக் கூடியதாக உள்ளது. முதலில் தமிழ்த் தேசியத்திற்கும் அதன் ஒற்றுமைப் பாட்டிற்கும் எதிரான விரோத துரோக சக்திகளை கருணாவின் துரோகத்தனம் வெளிக்கொண்டுவந்து காட்டியுள்ளதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

தமிழ்த் தேசியத்திற்கும் அதன் நலனுக்கும் இதன் ஒற்றுமைப்பாட்டிற்கும் எதிராக எத்தனை நாகப்பாம்புகள் நஞ்சைக் கொட்டினாலும் அதற்கு எத்தனைத் தமிழ்த் துரோக ஊடகங்கள் துணை போனாலும் தமிழ்த் தேசியம் தனது பலத்தை நிரூபித்துக் காட்டி வென்றது. தமிழ்த் துரோக சகதிகளும் அதற்குத் துணைபோன தமிழ்த்துரோக ஊடகங்களும் சிங்கள இனவாத சக்திகளின் ஊடகங்களும் கருணாவின் துரோகத்தனத்தை உபயோகித்து தமிழ்த் தேசியத்தைக் குறிவைத்துத் தாக்கிக்கொணடிருக்கையில் தமிழீழத் தேசியத்தின் பலத்தை அதன் ஒற்றுமைப்பாட்டை எவராலும் சிதைக்க முடியாது என்ற கருத்தினை வெளிப்படுத்தும் வகையில் தமிழ்த் தேசிய ஊடகங்கள் முன்னின்று பணிபுரிந்தன.

நாட்டுப்பற்றும், இனப்பற்றும், விடுதலைப்பற்றும், தமிழ்த் தேசியப்பற்றும் மிக்க இந்த ஊடகங்களின் பணி பாராட்டுக்குரியது; மிகப் போற்றுதலுக்குரியது! தமிழ்த் தேசியத்திற்கு எதிரான விரோத துரோக ஊடகங்களின் விசமப் பிரசாரத்தை முறியடித்து உண்மை நிலையை உலகிற்கு வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாது இந்தத் தமிழின விரோத துரோக சக்திகளின் முகமூடிகளையும் கிழித்தெறிந்த பெருமையும் எமது தமிழ்த் தேசிய ஊடகங்களையே சாரும். இன்று தமிழினத்திற்கும் - தமிழ்த் தேசியத்திற்கும் எதிராக இயங்குகின்ற இயங்கிவருகின்ற தமிழின விரோதிகள் யார்? தமிழினத் துரோகிகள் யார்? என்பதை எமது மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலேயே கருணாவின் நடவடிக்கைகள் அமைந்துவிட்டன.

இவ்வேளையில் தமிழீழத் தேசியத் தலைவர் வெளிப்படுத்தியுள்ள ஒரு முக்கியமான சமிக்கையையும் நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். தமிழீழத் தேசியப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்கலாம் என்ற நம்பிக்கையில் கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கும் மேலாக ரணில் விக்கிரமசிங்கவின் அரசோடு விடுதலைப புலிகள் பேச்சுக்களை நடத்தி வந்துள்ளார்கள். இந்தநிலையில் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் எதேச சதிகாரமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டு, பின்னர் அரசைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தியிருந்தார்.

இக்காலகட்டத்தில் கருணா என்கின்ற தனிமனித துரோகச் செயல் ஊடாக தமிழ்த் தேசிய ஒற்றுமைப் பாட்டுக்கு குறிவைக்கப்பட்ட போதும் தேசியத் தலைவர் பொறுமை காத்து பொதுத் தேர்தல் முடிந்த பின்னர்தான் கருணா மீதான நடவடிக்கையை ஆரமபித்திருந்தார். சந்திரிக்கா அம்மையாரின் அரசியல் கூட்டணி தமிழ்த் தேசியத்திற்கும் தமிழின உரிமைக்கும் எதிரான கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்ட அரசியல் கூட்டணியாக இருந்த போதும், இக் கூட்டணியானது அரசு ஒன்றை அமைத்து அதனைத் திடமாகநடத்தி விடுதலைப் புலிகளோடு நிபந்தனையற்ற உண்மையான சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கும் பட்சத்தில் சமாதானத் தீர்வுக்கான வாய்ப்பினைத் தமிழீழத் தேசியம் மீண்டும் ஒரு முறை சிங்களத்தேசத்திற்கு வழங்கியிருப்பதை தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களது நடவடிக்கையானது நிரூபித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது இராணுவ வெற்றிகள் மூலம் கண்ட இராணுவச் சமநிலை காரணமாக, அன்றைய சிறீலங்கா அரசும் அதற்கு நிதி வழங்கும் நாடுகளும் சமாதனப் பேச்சுக்களுக்கு இணங்கின. விடுதலைப் புலிகளின இராணுவ வெற்றிகள், அரசியல் ரீதியான சமதானப் பேச்சுக்களுக்கு அடித்தளம் இட்டன. விடுதலைப் புலிகளினதும் தமிழ் மக்களினதும் அமோக ஆதரவைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றியையும் பெற்றுவிட்டது.

ஜனநாயக ரீதியான அந்தப் பெருவெற்றிக்குப் பின்னர் கருணாவின் துரோகச் செயலுக்கும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான செயற்பாட்டிற்கும் எதிராக அநாயசமான இராணுவ நடவடிக்கை ஒன்றையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் நடத்திபெருவெற்றி கண்டுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் மிகப் பலம் பெற்று, அசைக்க முடியாத பெரும் சக்தியாக விளங்குகிறது என பதே உண்மையாகும்.

### புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலை

ஆயினும் புலம் பெயர்ந்த தமிழீழத்தவர்களாகிய எம் போன்றவர்களுக்கு, கருணாவின் சலசலப்பு ஓர் அதிர்ச்சி வைத்தியத்தையும் அளித்துள்ளதோ என்ற கருத்தையும் நாம் வெட்கத்தோடு அலசிப்பார்க்க வேணடியநிலையில் உள்ளோம். கடந்த ஈராண்டு காலத்திற்கும் மேலாக நடைமுறையில் இருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமும், போர்நிறுத்தமும், நடைபெற்ற பேச்சுக்களும், புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் இதயங்களில் கனன்று கொண்டிருந்த விடுதலை வேட்கையை, தமிழ்த் தேசியச் சுடரை சற்று மல்கச்செய்து விட்டனவோ என்ற ஐயமும் எழுகின்றது - அல்லவா? இந்த இடைப்பட்ட காலம், விடுதலை வேட்கை என்ற தீயை, நீறுபூத்த நெருப்பாக உருமாற்றம் செய்து விட்டதோ என்று எழுகின்ற கேள்விக்கும் நாம் விடையைத் தேட வேண்டாமா?

தமிழீழத் தேசிய விடுதலைக்கான போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை. போராட்டத்தின் வடிவம் தான் மாற்றம் பெற்றிருக்கின்றது என்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள், பல தடவைகள் வலியுறுத்திச் சொல்லி வந்துள்ளதை நாம் இவ்வேளையில் மீண்டும நினைவு கூருகின்றோம்.

கருணா ஏற்படுத்தியுள்ள சலசலப்பு, உண்மையில் புலம்பெயர்ந்த தமிழீழ மக்களை மேலும் வீச்சுடன் எழுச்சி கொள்ளவைத்துள்ளது என்பதை மறுக்க முடியாது. கருணா ஏற்படுத்திய நெருக்கடியைப் பயன்படுத்தி, தமிழ்த் தேசயத்திற்கெதிரான பரப்புரைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை தமிழ் விரோத துரோக சக்திகள் செய்து வந்தன என்பதை சுட்டிக்காட்டி இருந்தோம். கருணா என்கின்ற கண்கட்டு வித்தையினூடே, தமிழ்தேசிய ஒற்றுமைப்பாட்டை அசைத்துப்பார்க்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்று நாம் பல வாரங்களுக்கு முன்பே கருத்து வெளியிட்டு இருந்தோம்.

நாம் அப்போது இவ்வாறு கூறியிருந்தோம்:-

அன்புக்குரியவ்களே!

கருணாவின் கூத்து விரைவில் முடிந்துவிடும். கூத்தைப்பார்க்கும் வேளையில், கூரையைப் பிரிக்க முனையும் திருடர்களுக்கு இடம் கொடுக்கும் நேரமல்ல இது! கருணா ஏற்படுத்திய இந்த நெருக்கடி விரைவில் தீரக்கப்பட்டுவிடும் - அல்லது தீர்ந்துவிடும்.

இந்த வேளையில் நாம் கரிசனை கொள்வதற்கு வேறு முக்கிய விடயங்கள் உள்ளன. எமது மக்களின் வேட்கையான தாயகம் - தேசியம் - தன்னாட்சி சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்பட வேண்டியதற்கான செயற்பாடுகளில், புலம்பெயர்ந்த தமிழீழததவர்களாகிய நாம இறங்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது தடை விதித்திருக்கும் சில நாடுகள், அத்தடையை நீக்க வேண்டியதற்கான கோரிக்கைகளை நாம் வலுவாக முன்வைக்க வேண்டும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழுகின்ற தமிழர்களும், அவர்களைப் பிரநிதித்துவம் செய்கின்ற சங்கங்களும், கழகங்களும், கூட்டமைப்புக்களும், இந்த முக்கிய செயற்பாடுகளைத் தனியாகவும், கூட்டாகவும் மேற்கொள்ள வேண்டுமென்று இவ்வேளையில் உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு நாம் அன்றைய தினம் கேட்டுக்கொண்டிருந்தோம்!

கருணாவினால் எழுந்த நெருக்கடி முழுமையாகத் தீர்க்கப்பட்டுவிட்ட இவ்வேளையில், புலம்பெயர்ந்த தமிழீழ மக்களாகிய நாம், புது வேகத்துடன் எம்முடைய அரசியல் செயற்பாடுகளைத் தொடர வேண்டும். இன்றைய தினத்தில் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் மிகப பலம் வாய்ந்தநிலையில் உள்ளது.

### புலம்பெயர்ந்தோர் தயாராகட்டும்

சமாதானப் பேச்சுக்கள் ஊடே, தமிழரின் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாவிட்டால், தமக்கு உரித்தாயுள்ள சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் பிரகாரம், பிரிந்து சென்று தனியரசை அமைக்க வேண்டும் என்று தமிழீழ மக்கள் தமது ஆணையை, இப்பொதுத்தேர்தலின் ஊடே, ஒரே குரலில் தெட்டத் தெளிவாகத் தெரிவித்து விட்டார்கள்.

சந்திரிகா அம்மையார் அமைக்கவிருக்கும் புதிய அரசு, எவ்வளவு காலம் பதவியில் தாக்குப் பிடித்து நிற்கும் என்பது ஒரு புறமிருக்க, இந்த அரசு தமிழரின் தேசியப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உண்மையாகவே முயற்சிகள் எடுக்குமா? என்ற சந்தேகமும் பலமாகவுள்ளது. கடந்தகால வரலாறு எமக்கு கசப்பான உண்மையைத்தான் காட்டி நிற்கின்றது.

எனவே, எதிர்காலப் பேச்சுக்கள், உண்மையான பலனை, தீர்வைத் தராவிட்டால், இப்பேச்சுக்களில் காலத்தை கடத்துவது பிரயோசனமற்ற ஒன்றாகவே இருக்கும். சிங்கள தேசம், தமிழ்மக்களுக்கு நியாயமான கௌரவமான தீர்வைத் தராதபட்சத்தில், தமிழ் மக்களின் வேட்கையை நிறைவேற்றுவதற்குரிய தமது கடமையைச் செய்வதற்கு, புலம்பெயர்ந்த தமிழர்கள் இப்போதே தயாராக இருக்க வேண்டும்! ❐

# முதலாம் ஆண்டு நினைவினில்...

அன்னை
அ
ர
வ
ணை
ப்
பில்

06 - 06 - 1949



ஆண்டவன்
அ
ர
வ
ணை
ப்
பில்

08 - 05 - 2003

அமரர்

## சந்திரபாலதேவி ஸ்ரீபாலகிருஸ்ணன்

(சாந்தி) (அண்ணாமலை)

**திதி: ஸப்தமி**

பூவாய் மலர்ந்தமுகம்
புன்னகை தவழ்ந்தமுகம்
செக்கச் சிவந்த முகம்
சினம் அறியா செல்வமுகம்
ஒரு கொடியில் பூ ம் மலர்களில் ஒன்று
கண்மூடி இன்று
கறுத்துக் கிடக்கின்றதே
ஊரவர்கள், உறவினர்கள்,
உற்றவர்கள், அயலவர்கள்,
சுற்றத்தார் யாவருமே
சுகம் பெற நீ உதவி நின்றாய்!
சீறிச்சினக்காமல் சிரித்த முகத்தோடு
நீ வருதல் கண்டால் புன்னகையே பூக்கும்.

பாரினில் உறவுகள் காத்திருக்க
உங்களின் பாசத்துக்காக நாம் தவமிருக்க
பாதிவழியில் எம்மைப் பரிதவிக்க் விட்டு
பரலோகம் தான் சென்றனையோ சாந்தி?
ஓராண்டு நொடிப் பொழுதில் ஓடி மறைந்ததே சாந்தி
தீராத வேதனை மட்டும் தீர்ந்த பாடில்லையே சாந்தி
மாறாத நினைவுகளால் மனமே துடிக்குதம்மா சாந்தி
ஆறாத வடுக்கள் ஆறாமல் இருக்கின்றனவே சாந்தி

கனவுகள் பல சுமந்து களிப்போடு வாழ்வோம் என்றிருக்க
கனவுகள் கலையுமுன்னே காற்றோடு கலந்தீரோ!
அன்பின் திருவுருவாய் பாசத்தின் இருப்பிடமாய்
பண்பிற்கு இனியவராய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவைத்த
அன்புத் தெய்வமே! சாந்தி!!

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டுதான் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு என்றும் பிரியாது
குடும்பத்தின் அகல் விளக்காய் ஒளிகாட்டி வழிகாட்டி
நின்ற திருவுருவே சாந்தி!
எம் அகத்தில் அசையாது வீற்றிருப்பீர் ஆண்டாண்டு காலமாக!

எங்கள் வாழ்விற்கு காவல் கோபுரமாய்
கண்கண்ட தெய்வமாய்
கலங்கரை விளக்கமாய் விளங்கியவளே சாந்தி!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும் ஆறுதலுக்கு அருகில்
நீ இருப்பது போலத் தோன்றுகிறதே சாந்தி!
ஆயிரம் ஆயிரம் உறவுகள் வந்து சேர்ந்தாலும் எங்கள்
நெஞ்சங்களை விட்டகலாத உன் நினைவு!
நிலையற்ற வாழ்வில் கதியற்ற நிலையில் விதி தந்த
வேதனையில் சிக்கித் தவிக்கும் பாவப்பிறவிகள் நாங்கள்
அல்லற்பட்டுப் போக இடம் தெரியவில்லை! புலம்பி அழுதும்
பயனில்லை! ஆண்டு ஒன்று ஆனாலும் துயரமோ தீரவில்லை
மீண்டொருக்கால் வந்திங்கு எம் துயரம் தீராயோ சாந்தி?

வாழும்போது மங்காப் புகழோடு வாழ்ந்தவளே சாந்தி!
மறைந்த பின்னரும் புகழ் வீசுவீரே வான் பிறையாய்
உன்னை இழந்து தனிமரமாய் வேர் இழந்த விருட்சமாய்
தவிக்கின்றோம் அம்மா சாந்தி!
வருடம் ஒன்றாகியும் எம் நெஞ்சமெல்லாம் நீதானம்மா சாந்தி!

ஓராண்டு காலமது எமைத்தாண்டிச் சென்றிடினும்
மாழாது நின் நினைவு நாம் மரிக்கும் வரை நிலைத்திருக்கும்
நீங்கள் இல்லாத நாளெல்லாம் எங்களுக்கு விடிவில்லை
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (26.04.2004) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் அமரரின் நினைவுப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு

அன்புடன் அழைக்கின்றோம்.

*"பவள வாசா"*
*573, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.*

**T.P.: 222 5761**

கணவர் - **ப.ஸ்ரீபாலகிருஸ்ணன்** (அண்ணாமலை)
பெறா மக்கள் - **சிவசங்கர்** (லண்டன்),
**சிவாணி** (லண்டன்).

(31320) (24-11-16)

# ஓராண்டு நினைவலைகள்



## செல்வலிங்கம் சங்கீதா

ஓராண்டு போனதடி
நீ எம்மைவிட்டுச் சென்று
நூறாண்டு போனாலும்
நீங்காது உன் நினைவு.

புன்னகை பூத்த உன்முகமும்
இன்சுவையான உன் மொழியும்
தன்னடக்கமும் தயாள குணமும்
என்றுமிருக்கும் எம் நெஞ்சில்.

பூமியின் மடியில்: 16.09.1981
காலன் மடியில்: 26.04.2003

*சாந்தன் ,*
*அரியாலை.* (31334)(36-13-18)

உன்பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்,உறவினர்.

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி பூமாலட்சுமி அன்னலிங்கம்

(முன்னாள் ஆசிரியை, யா/மங்கையர்க்கரசி வித்தியாசாலை, நல்லூர்)
(1957-1973)

எமது பாடசாலையில் ஆசிரிய சேவையாற்றி லண்டனில் வசித்து வந்த திருமதி பூமாலட்சுமி அன்னலிங்கம் இறைபதம் அடைந்தமையை அறிந்து எமது பாடசாலைச்சமூகம் துயரில் பங்கு கொள்கிறது. ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

*பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யா/மங்கையர்க்கரசி வித்தியாலயம்.* (31332)(43-13-18-36)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் உப அதிபர்
செல்வி லூ.ஞா.மார்சலீன்பிள்ளை
அவர்களின் அன்புத் தந்தையார்

## சாமிநாதபிள்ளை மார்சலீன்பிள்ளை

(செல்வராஜா மாஸ்ரர்)

அவர்கள் 24.04.2004 அன்று காலமானார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*சிதம்பரக் கல்லூரி,*
*வல்வெட்டித்துறை.* (31331)(37-18-13-36)

அதிபர்,
ஆசிரியர்கள், ஊழியர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

இன்பத்தில் நாம் மகிழ
27 ★ 08 ★ 1940



துன்பத்தில் நாம் துவழ
26 ★ 03 ★ 2004

## அமரர் கந்தையா சச்சிதானந்தம்

யாழ். பலாலி றோட், 2 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும்
புலோலி கிழக்கு விராத்துப்பளையை வசிப்பிடமாகவும்
கொண்ட எங்கள் அன்புத் தெய்வம் கொழும்பிலே
ஒரு நொடியில் எம்மைப் பிரிந்து 32 நாள்கள் ஆகிவிட்டது.
நெருடுகிறது எம் மனம் தேடுகின்றோம் தேசமெல்லாம்
பண்பிலும் பாசத்திலும் எங்கள் அப்பா ஓர் இலக்கணமே!
எமைப் பாராட்டி சீராட்டி மிகக் கண்டிப்புடன் வாழவைத்த
அன்புத் தெய்வமே! எங்கள் அம்மா கதறும் கதறல்
உங்கள் செவிகளுக்கு கேட்கவில்லையா?
எம்காலம் முடியும்வரை நாம் உமை மறவோம்.
ஓம்சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

எமக்கு பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த
அன்பர்கள், நண்பர்கள், உறவுகள் யாவருக்கும்
எமது இதயபூர்வமான நன்றிகள் பல.


புலோலி கிழக்கு.
விராத்துப்பளை பருத்தித்துறை.

குடும்பத்தினர்(மகன் பேமராஜ்).

(31338)(36-18-13)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
10
01
1942



உதிர்வு
27
03
2004

## அமரர் காசிப்பிள்ளை வைரமுத்து

*(ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர்)*

எமது குடும்ப விளக்காய் நமக்கெல்லாம் ஒளிகாட்டிய
அன்புத் தெய்வமே! பாசத்தின் உறைவிடமே!!
எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியமும் அன்னாரின் இல்லத்தில் இன்று (26. 04. 2004) திங்கட்கிழமை முற்பகல் நடைபெறும். ஆகவே அந்நிகழ்விலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகள்,
மருமகள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரி.

*84/1,A,மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (31330)(37-18-13-36)

## கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்

கரவெட்டி, ஏப்.26

புலோலியில் அமைந்துள்ள வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்துக்கு அருகில் உள்ள காணிகளில் இருந்து மிதிவெடிகள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முன்னர் இந்தப் பகுதியில் படையினர் முகாம் அமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.(எ-70)

## மெட்டிஒலி திருமண சேவை

★ எம்மிடம் சகல வகையான ஆண், பெண் ஜாதகங்களும் உள்ளன.

★ யாழ் .மாநகர சபை எல்லைக்குள மேற்படி சேவையினை விஸ்தரிக்க அலுவலகத்திற்கு வீடு முழுமையாக அல்லது பகுதியாக தேவை.

★ யாழில் பணிபுரிய பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
S.பிறேமன்
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
0777 - 283795

(31339)(36)

## விற்பனைக்கு

புடைவைக் கடைக்குத் தேவையான அலுமாரிகள், சோக்கேஸ், மேசைகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:

ராணி ரெக்ஸ்
பலாலி வீதி உரும்பிராய்ச சந்தி,
உரும்பிராய். (31325)(43)

## Vacancy

**Computer Hardware Technician**

**யாழ் நகரில்**

விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ள கணணி விற்பனை, பராமரிப்பு / கணணி கற்கை நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த Computer Hardware Technician தேவை. Computer Hardware பயிற்சி நெறியை கற்பிக்கும் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

விண்ணப்பங்கள் ஒரு வார காலத்திற்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*Centre Manager*
**Singapore Informatics Computer School**
*117, New Chetty Street,*
*Colombo 13*


கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை

இலவசம்

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு:

யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
(30331)(18) யாழ்ப்பாணம்.

சங்கானை
விக்ரம், சூர்யா,
லைலா நடித்த



பிதாமகன்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பி.நே)
வெள்ளி, சனி ஞாயிறு இரவு 8.45 இற்கு (பி.நே)
DO NOT DISTURB

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந், அன்சி சிம்ரன், தியாகராஜன்
நடித்த
ஜெய்
காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 9.30 (பி.நே.)
(C 34180)(12)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா,
பிரகாஷ்ராஜ்
நடித்த



கில்லி
(ரீலீஸ்)
2.30
6.30, 9.30
(பி.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(C/34517)(22)


# வேலை வழங்கும் திட்டம் வெள்ளியன்று ஆரம்பம்!

கொழும்பு,ஏப்.26

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்ற மூன்று மாதகாலப் பகுதியில் 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கும் நடவடிக்கைத் திட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டதாரிகள் அல்லாத 25 ஆயிரம் பேருக்கு எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிமுதல் வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கையொன்றும் ஆரம்பிக்கப்படும் என அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உரத்தின் விலை மே முதலாம் திகதி முதல் குறைக்கப்படும். ஊழல் மோசடி ஒழிப்பு சட்ட மூலம் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (எ-க)

## கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய கும்பாபிஷேகதினம்

கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகதினம் சித்திரை மாதம் 14 ஆம் நாள் இன்று (26. 04. 2004) திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று காலை எம்பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைபெறும். பிற்பகல் எம்பெருமான் பரிவார மூர்த்திகள் சகிதம் எழுந்தருளி வீதி வலம் வந்து அருள்பாலிப்பார். அவ்வேளை விசேட தவில் கச்சேரியும் இடம்பெறும்.

அடியார்கள் எம்பெருமானைத் தரிசித்து அருள் பெற்றேகுமாறு வேண்டுகின்றோம்.

தானீசர் சபையினர்,
தச்சன்தோப்பு சிந்தாமணிவிநாயகர் ஆலயம்,
கரவெட்டி. (சி-34661)(37-13-18-36)

## பொதுக்கூட்டம்

வாழ்வகம் - விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லப் பொதுக்கூட்டம் 09.05.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வகப் பணிமனையில் நடைபெறும்.

பிரேரணைகள் ஏதும் இருப்பின் 07.05.2004 வெள்ளிக்கிழமைக்கு முன் வாழ்வக முதல்வருக்கு எழுத்துமூலம் அறியத் தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அங்கத்தவர்கள் தவறாது சமுகந்தரவும்.

வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.
24.04.2004 (31336)(36-13-18)

செயலர்
வாழ்வகம்.

## நன்றி நவில்கின்றோம்

பருத்தித்துறை வீதியில் எம்மால் தவறவிடப்பட்ட தாலிக்கொடியைக் கண்டெடுத்து சதாபொன்ஸ் நிறுவனம் அல்வாய் என்னும் இடத்தில் ஒப்படைத்த திரு மு.சிவகுமார் ஆசிரியர், வல்வை சிவகுரு வித்தியாலயம், திரு. சிவதாசன் வெள்ளிருவை அல்வாய், திரு. இ.பாலமுரளி, மடத்தடி, அல்வாய் ஆகியோருக்கும் உடனடியாக உதயன் பத்திரிகைக்கு செய்தி கொடுத்த சதாபொன்ஸ் நிறுவன உரிமையாளருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இதனை நாம் என்றும் மறக்கமாட்டோம் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

*281/6, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.* திரு.திருமதி கிஷோக்குமார.

(31337)(43-18-13)

# மரண அறிவித்தல்கள்

## சாமிநாதபிள்ளை மார்சலீன்பிள்ளை



(செல்வராசா மாஸ்டர் - இளைப்பாறிய ஆசிரியர்)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பழம்பெரும் நாடக ஆசான் "நாடகமணி" சாமிநாதபிள்ளை மார்சலீன்பிள்ளை (செல்வராசா மாஸ்டர்) அவர்கள் 24.04.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமிநாதபிள்ளை - சூசானம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மரியமுத்துவின் அன்புக் கணவரும் திருமதி ம.இ.உருத் திரக்குமாரன் (ஆசிரியை,யா/புனிதபத்திரிசியார் கல்லூரி), செல்வி லூ.ஞா.மாசலீன் பிள்ளை (உபஅதிபர், யாழ்/சிதம்பராக் கல்லூரி), மா.தோமஸ் சுயேந்திரன் (இத்தாலி), திருமதி அ.அ.யோகீஸ்வரராஜா (ஆசிரியை, யாழ்வல்வை மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் து.ருத்திரக் குமாரன், நா.யோகஸ்வரராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சித்திரலேகா, ராஜேந் திரக்குமர், நூபேந்திரக்குமர் (ஜேடா), விஜித்திரலேகா, ரவீந்திரக்குமார் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (2004-04-26) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தெணியம்பை,*
*வல்வெட்டித்துறை.*
(31329)(43-18-13-36)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

கலாபூஷணம்

## ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை

(செகராஜசிங்கம்)



யாழ்ப்பாணம், பாஷையூரைச் சேர்ந்த கலாபூஷணம் முத்தாரக் கவிஞர் புலவர் ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை அவர்கள் நேற்று (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்

அன்னார் பேணாட் ஆசீர்வாதம் - ராசாத்தி ஆகியோரின் அன்பு மகனும் ஞானரெத்தினத்தின் அன்புக் கணவரும் சிங்கத்துரை, றேனம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஞானசீலன், ஞானசோதி, நிர்மலசீலன், சேர்ச்சிலம்மா, ஜெகசோதி, அன்புமேரி, ஜெயசீலன் (ஜேர்மனி), தவசீலன், சத்தியசீலன், அருள்மேரி ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரிறோஸ், றவ்பாயெல், மகாராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஜான்ஸிராணி, காலஞ்சென்ற பிரான்ஸிஸ் நவரெட்ணராஜா (ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு அத்தியட்சகர்), யோசவ் (ஓய்வுபெற்ற ஆசிரியர், பரியோவான் கல்லூரி), இம்மானுவல் (ஓய்வுபெற்ற கூட்டுறவு உத்தியோகத்தர்), புளோறன்ஸியாராணி (ஜேர்மனி), ராணி, மேரிஅனஸ்ரீனா றஜனி, ஸ்ரீபன்ஸன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.04.2004) திங்கட்கிழமை பி.பகல் 4 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து யாழ்.புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.19, இரண்டாம் குறுக்குத் தெரு,*
*பாஷையூர்.* (31340)(36-13-18)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

# நாடாளுமன்றத்தின் கௌரவத்தை பாதுகாப்பதற்குப் பாடுபடுவேன்

## தலதாமாளிகை வழிபாட்டில் சபாநாயகர்

கண்டி,ஏப்.26

"அரசியல் சாசன சட்டதிருத்தங்களைப் பற்றிய விடயங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பொழுது அவை குறித்து சட்டவல்லு நர்களின் ஆலோசனையைப் பெறு வதுடன் எனது மனச்சாட்சிக்கு மாறாக எதையும் செய்யமாட்டேன்."

- இவ்வாறு புதிய சபாநாயகர் வி.ஜே.எம்.லொக்கு பண்டார கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் அவரை அணுகி நாடாளுமன்றத்தில் புதிய சபாநாயகர் தெரிவு குறித்து இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி பிரஸ்தாபித்த பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

13 ஆவது நாடாளுமன்றத்தில் 18 ஆவது சபாநாயகராக நான் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன். இந்தத் தெரிவை மேற்கொள்ள 9மணி நேரம் எடுத்தது. இதுவும் நாடாளுமன்ற வரலாற்றில் முக்கியமான நிகழ்வாக அமைந்துவிட்டது.

அனுரா பண்டாரநாயக்க இங்கு ஒரு முறை போட்டி இன்றியே சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறான ஒருநிலையை ஜனாதிபதியும் பிரதமரும் விரும்பியிருந்தால் பிரச்சினைகள் இன்றியே புதிய சபாநாயகர் தெரிந் தெடுக்கப்பட்டிருப்பார்.

எனது தெரிவுக்கு ஹெல உறுமய உறுப்பினர்களும் உதவினர். ஆனாலும் எனது பதவியைப் பொறுத்தமட்டில் எல்லோருமே என்னை ஆதரித்தவர்களாகவே நான் கருதுகிறேன்.

நாடாளுமன்றம் என்பது சட்டவாக்கத்தின் உயர்பீடம். இதன் கௌரவம் பேணப்படவேண்டியுள்ளது. எனவே எனது பதவிக்காலத்திலும் அனைத்து உறுப்பினர்களின் கௌரவத்தை நான் பாதுகாப்பேன்

இதன்பொருட்டு கட்சிகளை மறந்து எனது பணிகளைத் தொடர்வேன் நாடாளுமன்றத்தை சக்தியுள்ள அமைப்பாக மாற்றி அமைத்து சமூகங்களுக்குப் பயன்படும் வகையில் உருவாக்குவேன். நான் ஒருபோதும் பதவிக்கு ஆசைப்பட்டவனல்லன். இறைவன் மீது பூரண நம்பிக்கை கொண்ட என்னை இந்த உயர்பதவி வந்து நாடியதே தவிர வேறொன்றுமல்ல.

இவ்வேளையில் வெற்றியையும் தோல்வியையும் நாம் சமமாகப் பகிந்து கொள்ளவேண்டும் புரிந்துணர்வும் திறமையுமே எம்மைப் பக்குவப் படுத்தும்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய சபாநாயகர் குடும்ப உறுப்பினாகள் சகிதம் தந்த சின்னவழிபாட்டிலும் கலந்துகொண்டனர். அன்றைய தினம் புதிய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் இந்த வழிபாட்டுக் காக தலதா மாளிகைகது வந்திருந்தார். (எ-க)

## மகாவலி அமைச்சுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றின் கீழ் உள்ள ஐந்து பாரிய அணைக்கட்டுக்களையும் சுமார் இரு நூறு நீர் வாய்க்கால்களையும் பாதுகாக்கும் பணியில் இராணுவத்தினரால் முழுதாகப் பயிற்றுவிக்கப்பட்ட 650 பாதுகாவலர்கள் உட்பட சுமார் 800 பாதுகாவலர்கள் இந்த அமைச்சின் கீழ் பணியாற்றுகின்றனர்.

இந்த அமைச்சின் கீழ் உள்ள ஆயுதக்களஞ்சியங்களில் ரி.56 ரகத் துப்பாக்கிகள் - 450 மற்றும் ரி.59 ரக சீனத் தயாரிப்பு பிஸ்டல்கள்-23 உட்பட குறைந்தது 615 ஆயுதங்கள் உள்ளன.

இந்த அமைச்சின் கீழ் காடுகள் மற்றும் சுமார் ஆறு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் பாசன நிலமும் உள்ளன. மேலும் 8 ஆயிரம் கிலோமீற்றர் நீளமான கால்வாய் வலையமைப்பையும் இந்த அமைச்சே நிர்வகிக்கிறது.

இத்தகைய பெறுமதிமிக்க அமைச்சு இது என்பதைத் தெரியாமலேயே சு.க. பிரமுகர்கள் பலர் முன்னர் ஜே.வி.பிக்கு உறுதியளித்தபடி அந்த அமைச்சை ஜே.வி.பிக்கு வழங்கினால் என்ன என்ற கருத்தை வெளியிட்டு வந்தனராம். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி இல்லத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடந்த ஒரு கூட்டத்தில் இது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. ஜே.வி.பிக்கு அந்த அமைச்சைக் கொடுக்கலாம் என்ற சாரப்பட அங்கு சிலர் கருத்துக் கூறியபோது அவர்களின் வாயை மூடும் விதத்தில் கடுமையான தொனியில் பதில் தந்தாராம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன.

"மகாவலி அமைச்சின் முக்கியத்துவம் என்னவென்பது எனக்கும் ஜனாதிபதிக்கும்தான் தெரியும். பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்து அதிகளவில் ஆயுதங்களையும் இராணுவப்பயிற்சி பெற்ற ஆள்களையும் கொண்டுள்ளது இந்த அமைச்சுதான். அதனிடம் ஆயுதங்கள், ஷொட்கன்கள், வெடிபொருள்கள் எல்லாம் நிரம்பிக்கிடக்கின்றன. இராணுவப்பயிற்சி பெற்ற பெரிய படையணியே இந்த அமைச்சின் கீழ் உள்ளது.

"அதைத்தவிர இலங்கையில் மிகப் பெரிய காடுகள் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டிலும் நிர்வாகத்திலும்தான் உள்ளன. இந்த அமைச்சை ஜே.வி.பிக்குக் கொடுத்தால் சத்தமின்றி இராணுவப்பயிற்சி ஒன்றை முன்னெடுப்பதற்கான சகல வளங்களையும் அவர்களுக்கு வழங்கியதாகிவிடும். தெற்கில் மூன்றாவது ஆயுதக் கிளர்ச்சிகளு நாமே வழி செய்தவர்களாகி விடுவோம்" என்று அவர் கூறியதும் அரச தரப்பில் ஜே.வி.பிக்கு வக்காலத்து வாங்கியவர்கள் 'கப்சிப்' ஆகிவிட்டனராம்.

இந்த விடயத்தில் ஜே.வி.பிக்காகப் பேசி வந்த அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர போன்றோரும் இந்தத் தகவலோடு அடங்கிப் போய்விட்டனர் என்று கூறப்படுகின்றது. (எ-க)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தையும் பார்வையிட்டார்.

யாழ். நகரப் பகுதிக்குச் சென்ற அமைச்சர் அங்கு நின்றிருந்த பொது மக்களுடனும் கலந்துரையாடினார். பின்னர் நேற்று மாலை அவர் கொழும்பு திரும்பினார்.

இதற்கிடையில் -

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டே உள்ளூராட்சி அமைச்சர் யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்றும்-

இராணுவ, கடற்படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என்றும் கூறப்பட்டது.

ஐ.ம.சு.கூட்டமைப்பு ஆட்சிப் பொறுப்பேற்றதும் குடாநாட்டுக்கு வருகைதந்த முதலாவது அமைச்சர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-7-9)

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என கூட்டமைப்பின் இணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

சிறுபான்மையினரைப் புறம்தள்ளி விட்டு ஜனாதிபதி செயற்படுவதைத் தடுக்கும் வகையில் அழுத்தம் கொடுக்க இது நல்ல வழி என்றும் அவர் கூறினார். (எ-3)

## கருணாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தை அமுக்கியே வைத்துள்ளனர்.

மணிமாறனைத் தேடி கால்நடைப பண்ணைக்குச் சென்றபோது, அவரும் பொலீஸ் பாதுகாப்பில் இருப்பது தெரியவந்தது.

'க்யூ' பிரிவினரிடம் இரகசியமாகத் தகவல் சேகரிப்பில் ஈடுபட்டபோது 'பிடிபட்டவர்கள் விடுதலைப் புலிகள்தானா?" என்று கேட்கப்பட்டது.

"கருணாவின் ஆள்கள் என்பது எங்கள் விசாரணையில் தெரியவந்திருக்கின்றது. தேர்தல் நேரமாக இருப்பதாலும் கலைஞரின் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்ட சுற்றுப்பயணம் நடக்கவிருப்பதாலும் ஊடகங்களுக்குத் தகவல் போய்விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம்" - என்றார் 'க்யூ' பிரிவினர்.

- இப்படி அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


தென்னிலங்கையில் உள்ள அதிரடிப் படையினரின் ஒரு முகாமில் அல்லது இராணுவத்தளம் ஒன்றில் கருணா பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றார் எனப் புலிகள் கருதுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவி, புலிகளின் தலைமையை இலக்குவைக்கும் சதித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குக் கருணாவை ஒரு கருவியாகப் பயன்படுத்த இராணுவத்தரப்பு எத்தனிக்கலாம் என்றும் புலிகள் சந்தேகிக்கின்றனர்.

ஆபத்தான பேர்வழி ஒருவருக்குத் தஞ்சமளித்து, அவர் மூலம் புலிகள் இயக்கத்தின் தலைமையை ஆட்டங் காணச்செய்ய முயலும் ஓர் அரசுத் தலைமையுடன் ஒரே மேசையில் இருந்து சமரசம் பேசுவது குறித்து சிந்திக்கலாமா எனப் புலிகளின் மூதத பிரமுகர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவேண்டும் எனக் கருதும் புலிகளின் தலைமை, கருணா விவகாரம் குறித்தும் தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படவேண்டும் என விரும்புகிறது எனவும் தெரிகின்றது. (எ-க)

# இலட்சியத் தலைவர்



வாழ்வதா சாவதா இலங்கை அரசு
வழமைக்கு மாறாகத் தமிழர்க்குக் கேடு
சூழ்கிறது கண்டு துடிதுடித்த போது
சூழ்ச்சித் திட்டங்கள் வகுத்தெம் இனத்தை
ஆள்கின்ற பெரும்பான்மை எஜமான்கள் என்ற
அதிகாரத் திமிரைச் சகிக்க ஏலாது
மாள்கின்ற தமிழர்தம் மனதைக்கவர்ந்த
மாசற்ற தலைவர் தந்தை செல்வாவே.

இனியநற் காலம் தமிழர்க்கு அன்று
இருந்ததிங் கிலாந்தோடு போனது இன்று
பனிமலை யில்வெய்யில் உறைக்கவும் கண்டிப்
பாலாற்று நீரும் கசந்துவர் ஆச்சு
அயலில் துணையின்றி ஆதரிப்பு இன்றி
அவலமுற்ற தமிழருக்கு ஆதரவு தந்து
இயல்பில் பிரிந்ததமிழ் மாந்தர்களைச் சேர்த்து
இக்கட்டில் ஒற்றுமையை உணர்த்தியவர் செல்வா.

கருத்தினில் தெளிவும் சுருக்க வுரையும்
கடின உழைப்பும் ஆழ்ந்தசிந் தனையும்
திருத்திய செயலும் ஒழுக்கமும் வாய்மையும்
திறம்பாத வாழ்க்கையும் பல்லோரும் போற்றிடும்
அருத்தம் இன்பம் ஆகிய இரண்டையும்
அகமகிழ்ந் துவகையோ டனுபவித் தின்புறும்
ஒருத்தர் தமிழரின் அன்பிற்கும் பணிவிற்கும்
உரியலட்சியத் தலைவர்நம் செல்வாவே.

பட்டம் பதவியைத் தூவெனத் தள்ளினார்
பக்திசெய்யுந்தம் மக்கட்கு இரங்கினார்
சத்திய சோதனை செய்துதன் வழியுள்ள
தடைகளை ஒவ்வொன்றாய் நீக்கிப் பெரியதோர்
யுத்தத் துக்குத் தயாராகித் தமிழர்தம்
துயர்துடைத்துச் சுதந்திரம் துய்த்திட
உத்தமர் செல்வா காட்டிய வழியிலே
உழைத்த னர்பல் ஆயிரம் தொண்டரே.

தலைவரைத் தெய்வம் எனப் போற்றி வணங்கினர்
"தம்மைக் கைவிடார்" எனநம்பி நின்றனர்
அலைகின்ற மனத்தை ஒருநிலைப் படுத்தியே
ஆதர்ச தலைவர் சொல்வதைச் செய்தனர்
நிலையில் நின்றிழக் கொள்கைக்கு மாற்றினை
நினைத்துப் பார்க்கவும் கூசின நாயகர்
விலையிற் போகாத இலட்சியத் தலைவராய்
விளங்கினார் நாங்கள் செய்த தவத்தினால்.

★ தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 27 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ஈழத்தின் மிக மூத்த (எழுபத்தொன்பது வயதான)கவிஞர் தில்லைச் சிவன் (தி.சிவசாமி) எழுதிய 'தந்தை செல்வா காவியம்' என்ற நூல் இன்று வெளியிட்டு வைக்கப்படுகின்றது. அந்த நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளில் சில மேலே தரப்பட்டுள்ளன. (ஆ-ர்)

## சமாதான இணக்கப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது அரசு இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்துக்கு முன்னுரிமை வழங்கும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். அதன்பின் வன்னியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செலவனைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். அவரும் மீளக்குடியமர்வுக்கு தமது அமைப்பின் ஆதரவைத் தெரிவித்தார்.

என்னுடன் வந்த குழுவினர் இரு குழுக்களாகப் பிரிந்து இடம்பெயர்நத மக்கள் வாழும் வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்களுக்கும் சென்றுள்ளனர். தெற்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்களையும் சந்தித்து வருகின்றோம்.

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்தபின்னர், ஜெனீவா திரும்ப முன்னர், மீண்டும் ஜனாதிபதியைச் சந்திக்கவிருக்கின்றேன்.

கொழும்பில் எதிர்வரும் 28 ஆம் திகதி அமைச்சர்கள், எமது அமைப்பின் பங்காளியான அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக அமைப்பினர், உதவும் நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட மாநாடு ஒன்றை நடத்தவுள்ளோம்.

எமது இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு ஜெனீவா திரும்ப முன்னர் எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தவிருக்கின்றோம். - என்றார் அவர். (ஐ-3)

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை அல்பிறெட்

(இளைப்பாறிய பிரதம லிகிதர், RDA முல்லைத்தீவு)

இல.9/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அல்பிறெட் அவர்கள் நேற்று (25.04.2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ச.அந்தோனிப்பிள்ளையின் அன்பு மகனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும் யேசுரெத்தினம் (கனடா), யேசுரதினி (நிதிக்கிளை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்திநாதன் (கிராம உத்தியோகத்தர் J/49 ஊர்காவற்றுறை), திருமதி சூரியகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கீர்த்திசன், ரிஷானி, தர்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (26.04.2004) திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.9/1, கச்சேரி கிழக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.* (31342)(37-13-18)

தகவல்:
T.பத்திநாதன் (மருமகன்)

கலைவாணி
கல்வி நிறுவனம்
மானிப்பாய் வீதி, கோப்பாய்
CHEMISTRY
2006
பொது இரசாயனம்
சனி, ஞாயிறு - 4.30 - 6.30
2005
சேதன இரசாயனம்
செவ்வாய் 6.30 a.m. வியாழன் 4.30p.m.
ஆசிரியர் BY: பவான் B.Sc.
(31333)

Logic
மாபெரும் இறுதிக் கருத்தரங்கு
பகுதி II இன்று 2.00 p.m
SCIENCE HALL
(31341)(37)

வணிகக்கல்வி
2006
"புதிய பிரிவு"
திங்கள், வெள்ளி
3.30 p.m.
பல்கலைக்கழகம் முன்பாக (31318)
புமுரவி BBA FM (Spl.)

NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
மாணவர் கவனத்திற்கு!
V.C.அன்பழகன் ஆசிரியரின் இரசாயனவியல் வகுப்புகள் யாவும் நாளை (27.04.2004) செவ்வாய்க் கிழமை வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.
- நிர்வாகி.
(31319)

O/L DAY CLASS
A/L 2006
கலை, வர்த்தக, கணித பிரிவுகள்
விசேட ஆங்கில வகுப்புகள்
V.சிவநாதன்
கணனி கற்கை நெறிகள்
ஆரம்பம் :-27.04.2004
செவ்வாய் 6.00 a.m
THIGAAL,
K.K.S. வீதி, இணுவில்
(31322)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.